# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.வெளி.22.20

32,ஜெமிஎத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

**உலக ஜனத்தொகை கணக்கெடுப்பில் பெயர் கிறிஸ்தவர்கள் மெஜாரிட்டி – பல கோடிகள். பரிசுத்த வேதாகமத்தின் கணக்கெடுப்பில் உண்மை கிறிஸ்தவர்கள் மைனாரிட்டி – சில நூறுகள் மட்டுமே.**

**1. இயேசு : நீங்கள் என்னைத்தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். நான் உங்களை ஏற்படுத்தினேன். (யோ.15:16)**

**2. நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப்பகைக்கிறது. (யோ.15:19)**

1. பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நமக்குள் நிலைநிற்கிறதும், என்னென்றைக்கும் நம்மோடுயிருப்பதுமாகிய சத்தியத்தினிமித்தம் ; சத்தியத்தை அறிந்திருக்கிற, சத்தியத்தை நேசிக்கிற தெரிந்துக்கொள்ளப்பட்ட அனைவருக்கும்; கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானும் உண்டாவதாக.

2. நான் சத்தியத்தின் படி நேசிக்கிற எனக்கு பிரியமானவர்களே, இந்த ஆண்டின் முதல் நிருபம் மார்ச் மாத கடைசி வாரத்தில் உங்களுக்கு அனுப்ப ஆயத்தமாய் இருந்தது. ஏப்ரல் முதல் ஜூன் வரை வெயிலின் பாதிப்பு மிக அதிகமாக இருந்தது. என்னால் வெளியே எங்கும் செல்ல முடியவில்லை. வீட்டிலே அடைப்பட்டிருந்தேன். நான் கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் அனைவருக்கும் நிருபத்தை அனுப்பி வைக்க மே மாதம் இரண்டாவது வாரமாயிற்று. பொதுவாக இந்த பணியை ஒரே மாதத்தில் முடித்து விடுவேன். ஆனால் இந்த முறை சுமார் 15 நாட்களுக்கு மேலாகி விட்டது. இக்காலகட்டத்தில் சுமார் 1 மாத காலமாக எனக்கு ஆவியின் வழிநடத்துதல், இந்த நிருபத்தை எழுத கிடைக்கவில்லை. ஆவியானவரோடு என்னை ஒருமனப்படுத்த முடியவில்லை. ஏனென்றால் இந்நாட்களில் போராட்டங்கள் மிக அதிகம். நான் புதிதாக குடியேறி வந்துள்ள என் வீட்டிலிருந்து பஸ் நிறுத்தம் சுமார் 10 நிமிட நடைபயணத்தில் உள்ளது. ஆதலால் பையன்கள் ஒரு டி.வி.எஸ். ஸ்கூட்டியை வாங்கி கொடுத்தார்கள். எனது 75 வது வயதில் அதை ஓட்ட ஆரம்பித்தேன். பலமுறை வண்டியிலிருந்து விழுந்து எழுந்திருந்தேன். கர்த்தருடைய கிருபையினால் எனக்கோ வண்டிக்கோ அந்தவேளைகளில் எந்தவிதமான சேதாரமும் இல்லை. ஆனால் எனது வலது கை மணிக்கட்டு மற்றும் தோள்பட்டை சில காலங்களுக்கு பின்பு வலி எடுக்க ஆரம்பித்தது. மருத்துவ பரிசோதனை செய்தேன். பிரச்சனைகள் எதுவும் கிடையாது என மருத்துவர்கள் கூறி விட்டார்கள். சர்க்கரையின் அளவு என்னுடைய சரீரத்தில் அதிகமாக இருப்பதால் ஒருவேளை அதன் விளைவாக இருக்கும் இந்த வலி என கூறினார்கள். இந்த நிலையில் ஒரு நாள் மதிய மழைக்குப்பின் எனது மகளை வண்டியில் ஏற்றிக்கொண்டு பஸ் நிறுத்தத்திலிருந்து வீட்டிற்கு வந்துக்கொண்டிருக்கும்போது, எங்களது லேஅவுட் மெயின் கேட் பக்கத்தில் ஒயின்ஷாப் இருப்பதால், ரோட்டில் வாகனங்கள் நெருக்கடி சற்று அதிகமாக இருந்தது. இந்த நெருக்கத்தை சமாளிக்க முடியாமல் வண்டியிருந்து கீழே விழுந்து விட்டோம். மார்பின் வலது பக்கம் சற்று பலமான அடி. சிலர் உதவி செய்ய, எழுந்திருந்து, என் பலவீனத்தில் பலன் காணப்பட்டதால் வண்டியை மீண்டும் ஓட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். மகள் பிசியோதெரப்பிஸ்டாக இருப்பதால் தேவையான சிகிச்சைகள் அவ்வப்போது பெற்றேன். ஒரு வாரத்தில் கர்த்தருடைய கிருபையினால் சுகமானேன். ஆனாலும் என் பலவீனத்தில் கர்த்தருடைய பலன் பூரணமாய் விளங்குவதால் எனது அன்றாட பணிகளை தொடர்ந்து செய்துவருகிறேன். இந்த நிருபத்தையும் எனது வலது கையினால் எழுதி முடித்தேன். கர்த்தர் நல்லவர் என்பதை என் வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் ருசிபார்த்து வந்துகொண்டிருக்கிறேன். இது ஆச்சரியமான கிருபை.

3. இந்நிலையில் குடும்ப பிரச்சனைகள் பல அவ்வப்போது எழுந்து மனஇறுக்கத்தை கொண்டுவந்தது. அதில் சில தொடர்கிறது. இரு பெண்களின் திருமணம் இதுவரை நடைபெறவில்லை. காலம் கடந்து சென்று கொண்டேயிருக்கிறது. ஆனால் கர்த்தருடைய வேளை இன்னும் வரவில்லை என்ற விசுவாசம். இந்நிலையில் பெண்கள் இருவரும் கர்த்தருக்குள் மனரம்மியமாக இருந்து வருகிறார்கள். எந்த நிலையில் இருந்தாலும் மனமகிழ்ச்சி.

ஆதலால் சோர்வு இல்லை. எங்களுடைய பாரத்தை கர்த்தர்மீது வைத்துவிட்டபடியினால், எந்த நிலையில் இருந்தாலும் கவலையற்று இருக்கிறோம். அடுத்து சுமார் 10 ஆண்டுகள் ஆகியும் மூத்த மகனுக்கடுத்த திருமண காரியத்தில் உண்டான பெண் வீட்டாரின் விசுவாச துரோகம், நம்பிக்கை துரோகம், வஞ்சனை இது போன்ற காரியங்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. மகனும் மருமகளும் மன ரம்மியமான ஒரு இல்லற வாழ்க்கை வாழ்ந்து வருவதால், அவர்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க மனதில்லாமல் காலத்தை கடத்திக்கொண்டே வருகிறார்கள். இது ஒரு தொடர் சம்பவமாகவே இருந்துவருகிறது. மற்றொரு பிரச்சனை என்னவென்றால் எனது குடியிருப்பு ஜெமி எத்திராஜ் நகர் அடுத்து ஒயின்ஷாப் உள்ளது. நாங்கள் இங்கு வந்து குடியேறிய பிறகுதான் இது ஆரம்பிக்கப்பட்டது. சிலவேளைகளில் குடிமகன்கள் அத்துமீறி எனது குடியிருப்பு பகுதிகளில் வந்து குடிக்க ஆரம்பித்து விடுவார்கள். இது அவ்வப்போது எங்களுக்கு ஒரு தொல்லையாக இருந்துவந்தது. மாவட்ட கலெக்டர், மாவட்ட காவல்துறை அதிகாரிக்கு புகார்கள் ஒன்றன்பின் ஒன்றாக கொடுத்தும் பல மாதங்களாக பலனற்று இருந்துவந்தது. எதிர்பாரத வேளையில் ஒரு நாள் திருவள்ளூரிலிருந்து காவல்துறை ஆய்வாளர் வந்து ஒயின்ஷாப் பகுதியை முற்றிலும் முள்வேலியினால் அடைக்க ஏற்பாடுகள் செய்து சென்றார். ஆதலால் இப்பொழுது குடிமகன்கள் எங்களது பகுதிகளுக்குள் வருவது இல்லை. கர்த்தர் கிரியை செய்தார். இப்பொழது குடிமகன்களிடமிருந்து பிரச்சனையின்றி மனநிம்மதியாக இருக்கிறோம். அடுத்து இரண்டாவது முறையாக தபால்துறை தொந்தரவு தொடர்ந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் போஸ்ட் மாஸ்டர் இந்த பிரச்சனையை ஆரம்பித்துள்ளார். மதுரை மண்டல தபால்துறை அதிகாரி (Post Master General - Madurai) மற்றும் சென்னை தபால்துறை அதிகாரி (Post Master General- Chennai City) அவருக்கு ஆதரவாக செயல்படுகின்றனர். நான் சட்டத்தின்படி ஒரு புத்தகத்திற்கு ஒரு ரூபாய் தபால்தலை ஒட்டி வருகிறேன். ஆனால் இவர்களோ நான் 4 ரூபாய் ஒட்டவேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். காரணம் என்னுடைய வெளியீடு ஒரு மாதாந்திர பத்திரிக்கை என்கிறார்கள். இது 100% தவறான தகவல். நான் வருடத்தில் மூன்று அல்லது நான்கு புத்தகங்கள் மட்டுமே வெளியிடுகிறேன். அடுத்து புத்தக கடைசி பக்கத்தில் புத்தகம் வெளியிடும் மாதம், வருடம் ஒரு பொது தகவலுக்காக அச்சிடுகிறேன். மற்றும் இதற்கு தபால்துறை சட்டத்திலும் இடமுண்டு. நான் மாதம் மற்றும் வருடம் போடுவதால், அது மாதாந்திர வெளியீடு என பொருள்படும் என்கிறார்கள். ஆக தபால்துறை எழுதப்படாத சட்டத்தை கொண்டு என்னை அடக்க முயற்சிக்கிறார்கள். நானும் கர்த்தர் எனக்கு கொடுத்த பலத்தோடு போராடி வருகிறேன். ஆதலால்தான் கடைசிப்பக்கத்தில் விலாசப்பகுதியில் சற்று மாற்றம் செய்து உத்தரவுக்கு மாறாக மீண்டும் ரூபாய்.1 தபால்தலை ஒட்டி அனுப்பியுள்ளேன். இவ்வாறாக உலக பிரகாரமான காரியங்களிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் நெருக்கம், போராட்டம். இந்நிலையிலும் கர்த்தர் எனக்கு அவர் கொடுத்த ஊழியத்தை அவரே நடத்தி வருகிறார். கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு எப்பொழுதும் வெற்றி உண்டு. உண்மையிலே நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகம். கர்த்தர் அவை எல்லாவற்றிலின்றும் அவனை விடுவிக்கிறார். அல்லேலுயா.

4. இப்பொழுது நமது நிருபத்தின் செய்திக்கு வருவோம். **தெரிந்துகொள்ளுதல்** என்பது ஆங்கிலத்தில் எலெக்ஷன் (Election) எனவும், எபிரேயர் சொல்லில் பாஹர் (Bahar) எனவும், கிரேக்க சொல்லில் எக்லெகொமை (Eklegomai) எனவும் அழைக்கப்படுகிறது. தெரிந்துகொள்ளுதல் என்பது ஒரு தனி மனிதனின் சுதந்திரம். இதில் எவரும் மற்றொருவரை கட்டாயப்படுத்த முடியாது. நிர்பந்தப்படுத்த முடியாது. கட்டாயத்தின் பேரிலோ அல்லது நிர்பந்தத்தின் பேரிலோ ஒருவர் ஒன்றை செய்தால் அது அவருடை தெரிந்துகொள்ளுதல் ஆகாது. பாருங்கள் பெற்றொர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்புக்கடுத்த காரியத்தில் அவர்கள் ஒரு பிரிவை தெரிந்துகொண்டு அதை படிக்கும்படி நிர்பந்தப்படுத்துகிறார்கள், கட்டாயப்படுத்துகிறார்கள். தங்களது பையனுக்கோ அல்லது பெண்ணிற்கோ அவர்களது சம்பந்தம் இல்லாமல் பெற்றோர்களே வரன் பார்த்து திருமணம் செய்து வைக்கிறார்கள். ஒரு தொழிலை தெரிந்துகொண்டு அதை செய்யும்படி பெற்றோர் பிள்ளைகளை கட்டாயப்படுத்துகிறார்கள். இவை அனைத்தும் ஒரு நபருடைய தெரிந்துகொள்ளுதல் ஆகாது. மாறாக ஒன்றை மற்றொருவர் மீது திணிப்பதாகும். இப்பொழுது நமது நாட்டில் மும்மொழி பாடத்திட்டம் எனக்கூறி, ஒருவனை தன் தாய்மொழியோடு சேர்த்து இதர இரு மொழிகளை கற்க மாணவர்களை கட்டாயப்படுத்துகிறார்கள், நிர்பந்தப்படுத்துகிறார்கள். சுருக்கமாக சொல்லப்போனால் ஆங்கிலத்திற்கு பிறகு ஹிந்தியை மாணவர்கள் மீது திணிப்பதாகும். ஆக ஒரு மாணவன் ஹிந்தியை படிக்க விரும்பாவிட்டாலும், அது அவன் மீது திணிக்கப்படுகிறது. ஆக இந்தியாவில் தான் விரும்பிய மொழியில் தன் பாடத்தை கற்க ஒரு மாணவனுக்கு சுதந்திரம் இல்லை. அவன் ஒன்றை தெரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் பிற்காலத்தில் நமது தெரிந்துகொள்ளுதலினால் நன்மையோ அல்லது தீமையோ ஏற்படலாம். அந்த சூழ்நிலையில் இரண்டிற்கும் நாமே பொறுப்பேற்க வேண்டும்.

5. இப்பொழுது தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைத்தவராலே நிலைநிற்கிறது. (ரோ.9:11) The calling of God is by Election and not of works. அதாவது ஒருவனுடைய கிரியைகளை கொண்டு மாத்திரம் தேவன் அவனை தெரிந்துகொள்வதில்லை. மாறாக அது அவருடைய தீர்மானம். அதாவது தேவன் எவர்களை முன்னறிந்திருந்தாரோ அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமாயிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைபடுத்தியுமிருக்கிறார். (ரோ.8:29) தெரிந்துகொள்ளுதல் தேவனுடைய சுயாதீனம். அது மனிதனின் தகுதியன்று. (ரோ. 8:16) அவர் சிலரை தெரிந்துகொள்கிறார், சிலரை தள்ளுகிறார். தியானியுங்கள் ரோமர்.9அதி. அதேவேளையில் ஒருவன் தன்னை தேவன் தெரிந்துகொண்டார் என்று எண்ணினால், அவன் தன் தெரிந்துகொள்ளுதலை உறுதியாக்கும்படி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அப்படி செய்தால் அவன் ஒருக்காலும் இடறுவதில்லை. (2பேது.1:10) காலேப் யோசுவா அனைவராலும் வெறுக்கப்பட்டு, தனிமனிதனாக தேவன் கொடுத்த

ஊழியத்தை அவருடைய கிருபையினால் நிறைவேற்றி வருகிறார். ஆதலால் இதுவரை இடறவுமில்லை, சோர்ந்துபோகவுமில்லை, யாரையும் பிரியபடுத்தவுமில்லை, தேவன் எனக்கு துணையாக நிற்கிறார்.

6. இப்பொழுது கவனியுங்கள். பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நன்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில் மூத்தவன் இளையவனுக்கு ஊழியம் செய்வான் என்று கூறப்பட்டுள்ளது. (ரோ.9:11,12) இதோடுமட்டுமல்ல யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. (ரோ.9:13) அப்படியானால் தெரிந்துகொள்ளுதலில் தேவனிடத்தில் அநீதி உண்டா? அப்படி சொல்லக்கூடாதே? இதுகுறித்து தேவன் எவன் மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருப்பேனோ அவன் மேல் இரக்கமாயிருப்பேன், எவன் மேல் உருக்கமாயிருக்க சித்தமாயிருப்பேனோ அவன் மேல் உருக்கமாயிருப்பேன் என்கிறார். (ரோ.9:15) ஆதலால் எவனை கடினப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனை கடினப்படுத்தவும் செய்கிறார். (ரோ.9:18) நான் அவன் (பார்வோன்) இருதயத்தையும் அவன் ஊழியகாரரின் இருதயத்தையும் கடினப்படித்தினேன் என்கிறார். (யாத்.10:2) கர்த்தர் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தினதினால் அவன் இஸ்ரவேல் புத்திரரை தன் தேசத்திலிருந்து போகவிடவில்லை. (யாத்.11:10) நான் அவன் இருதயத்தை கடினப்படுத்தினேன். அவன் ஜனத்தை போகவிடான். (யாத்.4:21) கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தபடியே, கர்த்தர் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தினார். (யாத்.9:12) பார்வோன் அவர்களை பின் தொடரும்படிக்கு கரத்தர் அவன் இருதயத்தை கடினப்படுத்தினார். (யாத்.14:4) ஒருவேளை இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவன் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்துவது அநீதி, பாரபட்சம் என கூறலாம். ஆனால் அவரோ உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை, நீ என்னை ஏன் இப்படி உருவாக்கினாய் என்று சொல்லலாமா என்கிறார். (ரோ.9:20) குயவனுக்கு களிமண் மீது அதிகாரம் இல்லையா? குயவன் ஒரு பாத்திரத்தை கனமானதிற்கும், ஒரு பாத்திரத்தை கனவீனமான காரியத்திற்கும் உருவாக்க அவனுக்கு களிமண் மீது அதிகாரம் இல்லையா என்கிறார். (ரோ. 9:21) நாம் குயவனால் களிமண்ணினால் உருவாக்கப்பட்ட ஒரு பாத்திரத்தை நமது ஆகாரம் சமைக்கவும், அதே களிமண்ணினால் உருவாக்கப்பட்ட மற்றொரு பாத்திரத்தை மலஜலம் கழிக்க தண்ணீர் கொண்டு செல்வதற்கும் உபயோகிப்பது இல்லையா? ஆக தெரிந்துகொள்ளுதல் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்லை, இரங்குகிற தேவனாலே எல்லாம் ஆகும். (ரோ.9:16) அதுதான் கிருபை.

7. நீங்கள் ஒருவேளை கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் ஒரு தகப்பனுக்கும், தாய்க்கும் பிறந்தவர்களாக இருக்கலாம். பரிசுத்தவான்களுடைய பெயர்களை மோசே, யோசேப்பு, மரியாள், எஸ்தர் என கொண்டு இருக்கலாம். சிறுவயது முதல் வீட்டில் குடும்பஜெபத்திலும், நீங்கள் சார்ந்திருக்கும் சபையில் ஞாயிறு ஆராதனையில் பங்கு கொண்டவர்களாகவும் இருக்கலாம். வளர்ச்சி அடைந்து கல்விகளை கற்று B.Th., M.Th., போன்ற பட்டங்களை பெற்று ஏதோ ஒரு சபையில் போதகனாக இருக்கலாம். ஆனால் ஒரு வேதாகம கல்லூரியில் வேத சாஸ்திரம் படித்து பெற்றது ஒரு அனுபவமே தவிர அவர்களுக்கு தேவனை குறித்து ஒன்றுமே தெரியாது. அந்நிலையில் கூட சில ஆயிரம் ஜனங்களுக்கு போதகனாக இருக்கிறார்கள். ஜனங்கள் நல்ல விசுவாசிகளாயிருந்து, சபைக்கு காணிக்கை, தசமபாகம் கொடுக்கிறவர்களாகவும் இருக்கலாம். பலருடைய ஊழியத்தில் பண உதவி செய்து, அவர்கள் ஊழியத்தை தாங்கலாம். தானதர்மங்களை செய்யலாம். இவைகள் யாவும் நீங்கள் கிறிஸ்தவர்கள் என்பதற்கு ஒரு வெளிப்புறமான அடையாளமாகயிருக்கலாம். இவைகள் யாவும் நலமானதுதான். ஆனால் இவை அனைத்தும் நீங்கள் ஒரு உண்மை கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியுடையதாக இருக்காது. பாருங்கள் கொர்நேலியு தேவபக்தி உள்ளவன், வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவன். ஜனங்களுக்கு மிகுந்த தானதர்மங்களை செய்தவன். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணினான். ஆனாலும் அவனும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்படவில்லை. (அப்.10:2, 11:14) கவனியுங்கள். நீங்கள் உங்களை இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாக எண்ணிக்கொள்ளலாம். ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் என கூறிக்கொள்ளலாம், ஆனால் உங்கள் பழைய சுபாவங்கள் உங்களை பின்தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். ஆனாலூம் நீங்கள் தேவபக்தியுள்ளவராக காணப்படலாம். தேவனுக்கு மிக்க பயந்தவர்களாக காணப்படலாம். நீதியும் நேர்மையும் உங்களிடத்தில் காணப்படலாம். நீங்கள் எப்பொழுதும் வெள்ளை வேஷ்டி ஜிப்பாவில் காணப்படலாம். வெள்ளை சேலையிலும் காணப்படலாம். வெளியே வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை போன்று காணப்படலாம். நீங்கள அடிக்கடி ஜெபத்திலும், உபவாசத்திலம் காணப்படலாம். இது எல்லாம் நல்லதுதான். ஆனால் இவை அனைத்தும் உங்களை தேவனுடைய தெரிந்துகொள்ளுதலுக்கு தகுதியாக்காது. நீங்கள் உங்களை கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை தரித்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளலாம். ஆனாலும் தேவனுடய பார்வையில் நீங்கள் அவருடையவர்கள் அல்ல.

8. நாம் வாழும் இந்த பூமியின் / உலகத்தின் ஜனத்தொகை சுமார் 800 கோடியாகும். இவர்கள் மத்தியில் 4200 மதங்கள் / மார்க்கங்கள் இருக்கின்றன. இதில் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை சுமார் 250 கோடிகள். இதில் கத்தோலிக்க மார்க்கத்தை சேர்ந்தவர்களின் பங்கு தான் அதிகம். அதற்கு அடுத்தாக முகமதியர்கள் வருகிறார்கள். கிறிஸ்தவர்கள் மத்தியில் பெரும்பாலாக இருபெரும் பிரிவுகள் உள்ளன. ஒன்று கத்தோலிக்க திருச்சபை மற்றொன்று புராட்டஸ்டண்ட் சபை. ஆனாலும் இவைகளில் பல ஆயிரகணக்கான உட்பிரிவுகள் உண்டு. இந்த பிரிவுகளின் எண்ணிக்கை சுமார் 33,820 என அறியவந்தேன். ஆக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் இந்த 250 கோடி மக்கள் மத்தியில் பல பிரிவுகள், பல உட்பிரிவுகள் உண்டு. கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் இவர்கள் பிரிந்து வாழ்கிறார்கள். ஆனால் கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா என்றால் இல்லை என 1கொரி.1:13ல் வாசிக்கிறோம். ஆக இவர்கள் பிரிந்து பிரிந்து பற்பல கோட்பாடுகளை, உபதேசங்களை கொண்டுள்ளார்கள். அதற்கேற்றபடி பற்பல பெயர் பலகைகளையும் கொண்டுள்ளார்கள். ஆனாலும் இவர்கள் யாவரும் ஒட்டுமொத்தமாக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் உண்மையில் கூறப்போனால் வேதவாக்கியங்களின் அடிப்படையில் இவர்கள் பெயர் கிறிஸ்தவர்களேயன்றி உண்மை கிறிஸ்தவர்கள் அல்ல. இவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான

சம்பந்தமும் இல்லை. இவர்கள் அவரை தங்களது உலக ஞானத்தினால் அறிந்து, தெரிந்திருக்கலாம். ஆனால் தேவன் இவர்களை தெரிந்துகொண்டுள்ளாரா என்றால் இல்லவே இல்லை. நம்முடைய சரீரத்தில் பல அவயவங்கள் உண்டு. ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படுவதால், ஒட்டுமொத்தமாக சரீரம் செயல்படுகிறது. காலும் கையும் கண்ணும் பிரிந்து செயல்பட்டால் சரீரம் செயல்படாதே. அவைகள் யாவும் ஒற்றுமையாகயிருந்தால் தானே செயல்படும். அதுபோன்றுதான் கிறிஸ்துவின் சரீரமும். கிறிஸ்துவின் சரீரம் பிரிந்திருக்காது. பிரிந்திருந்தால் அது கிறிஸ்துவின் சரீரமாகாது. ஆக இன்று கிறிஸ்தவ சபைகளில் பல பிரிவுகள் காணப்படுவதால் அவர்கள் கிறிஸ்துவின் சபையே அல்ல. கிறிஸ்துவின் சரீரமும் அல்ல. கிறிஸ்துவை தரித்தவர்களும் அல்ல. கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயும் அவருடைய மாம்சத்துக்கும், எலும்புக்கும் உரியவர்களாயுமில்லை. ஆதலால் இவர்கள் பெயர் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் பரிசுத்தவான்களுடைய பெயர்களை தரித்துக்கொண்டவர்கள் மாத்திரமே. ஆதலால் இந்த உலகத்தில் உண்மையான கிறிஸ்தவர்கள் மிக சொற்ப ஜனங்களே. ஆதியில் எகிப்திலிருந்து சுமார் 20 லட்சம் ஜனங்கள் கானானுக்கு போக வெளியே வந்தார்கள். முடிவில் 2 பேர் காலேப் மற்றும் யோசுவா மாத்திரமே கானானுக்குள் பிரவேசித்தார்கள். அந்த திருஷ்டாந்தத்தின்படி 250 கோடி கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் மத்தியில் 20 இலட்சத்திற்கு 2 நபர் என்றால் 2500 பேர் தான் உண்மையான கிறிஸ்தவர்கள். அப்படியானால் இந்த உலக ஜனத்தொகையில் உண்மையான கிறிஸ்தவர்கள் மைனாரிட்டியேயன்றி மெஜாரிட்டி அல்ல. இந்த திருஷ்டாந்தத்தின்படி உலகில் 2500 பேர் தான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இந்தியாவில் மக்கள் தொகை 10-07-2019ல் 136 கோடி 58 லட்சம் 5 ஆயிரம் 425 பேர்.(தந்தி.11-07-2019) இதில் கிறிஸ்தவர்கள் சுமார் 280 லட்சம் பேர். இதில் 20 இலட்சத்தில் 2 பேர் என்ற திருஷ்டாந்தத்தின்படி பார்த்தால் 28 பேர் தான் இந்தியாவில் உண்மையான கிறிஸ்தவர்கள். எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இதை நான் ஒரு திருஷ்டாந்தமாகத்தான் எழுதுகிறேனேயன்றி தேவன் என்னோடு இடைப்பட்டு கொடுத்த எண்ணிக்கை என்று கூற மாட்டேன். பாருங்கள் அழைக்கப்பட்டவர்கள் அநேகர். ஆனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலரே என்று நாம் வாசிக்கிறோம். (மத்.20:16) மேலும் இது ஒரு சிறு மந்தை. இவர்களுக்குதான் தேவனுடைய ராஜ்யம் கொடுக்கப்படுகிறது. (லூக்.12:32) கவனியுங்கள் ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெறுக்கமுமாய் இருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். (மத்.7:14) இவர்கள் தான் அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரிய கூட்டாமாயும், பரிசுத்த ஜாதியாயும் அவருக்கு சொந்தமான ஜனங்களுமாகும். (1பேது.2:9) இவர்கள்தான் தங்கள் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, உலக தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். (எபே.1:4) பாருங்கள் இவர்கள் தங்கள் தாயின் கர்ப்பத்தில் உருவாகி வளர்ந்து வந்தபோது அல்ல, பிறந்து வளர்ந்தபோது அல்ல, வளர்ந்து ஞானஸ்நானம் பெற்றபோது அல்ல, ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டபோது அல்ல, மாறாக உலகத்தோற்றத்திற்கு முன்னே முன்னறிந்து, முன்குறிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளபட்டவர்கள். கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்கள். (அப்.9:15) உங்கள் மத்தியில் உள்ள பிஷப், டாக்டர்கள், தலைமை போதகர்கள், B.Th., M.Th., போன்ற பட்டதாரிகள் யாவரும் தேவனுடைய நாமத்தை அறியாதவர்கள். பொதுவாக கூறப்போனால் திரித்துவ ஸ்தாபன விசுவாசிகள் யாவருமே தேவனுடைய நாமத்தை (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) அறியாதவர்கள். படிப்பறியாதவர்களும் பேதைமையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்று அறியப்பட்ட அப்போஸ்தலர் போன்றவர்களே அறிந்திருந்தார்கள். இவர்களை போன்றவர்கள்தான் கர்த்தர் தமக்கு சுதந்தரமாக தெரிந்துகொண்ட கொண்ட ஜனங்கள்.

9. தேவன் யார்? கர்த்தர் யார்? தேவனாகிய கர்த்தர் யார்? பிதா யார்? குமாரன் யார்? பரிசுத்த ஆவி யார்? தேவகுமாரன் யார்? மனுஷகுமாரன் யார்? தாவீதின் குமாரன் யார்? கர்த்தருடைய தூதனானவர் யார்? கிறிஸ்து யார்? கர்த்தராகிய கிறிஸ்து யார்? இயேசு யார்? இயேசு கிறிஸ்து யார்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யார்? இவை அனைத்தும் ஒருவருடைய பெயர்களா? அல்லது அவருடைய தன்மைகளா? இவை அனைத்தும் ஒருவரை குறிக்கின்றதா? இருவரை குறிக்கின்றதா? மூவரை குறிக்கின்றதா? பலரை குறிக்கின்றதா? கவனியுங்கள் இவை அனைத்தும் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்திற்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அல்லவா குறிக்கிறது. (எபே.3:14,15) இதை அறியாதவர்கள் எப்படி ஒரு கிறிஸ்தவனாக இருக்கமுடியும்? கிறிஸ்துவை தரித்துக்கொண்டவனாக இருக்கமுடியும்? தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவுக்காக தெரிந்துகொள்ளப்பட்டவராகயிருக்கமுடியும்? இதை ஏற்றுக்கொள்ளாதவன், இதை விசுவாசியாதவன் எப்படி தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று அழைத்துக்கொள்ள முடியும்? கவனியுங்கள் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குமாத்திரமே உண்டாகும். (தீத்.1:3) தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறதே. (கொலோ.2:9) சகல பரிபூரணமும் கிறிஸ்தவுக்குள் வாசமாயிருக்கிறதே.(கொலோ.1:19) ஆக தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க மனதில்லாத திரித்துவ சபை விசுவாசிகள், சபை தலைவர்கள் எப்படி தங்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ள முடியும்? உங்களுக்கு பரிசுத்த ஆவி உண்டென்று கூறி, நீங்கள் தேவனுடைய வார்த்தையில் நிலைநிற்காமல் போனால், சத்தியத்தை அறியும் அறிவை அடையாமல் போனால் உங்களுக்குள் இருப்பது வேறொரு ஆவி. அது தேவனுடைய ஆவி அல்ல. தேவனுடைய ஆவி அவருடைய வார்த்தையின்மேல் தங்கியுள்ளது. திரித்துவ ஸ்தாபன தலைவர்கள், விசுவாசிகள் யாவரும் தேவனுடைய வார்த்தையின்மேல் தங்களுடைய விசுவாசத்தை கொண்டிருக்கவில்லை. மாறாக அதனாசியஸ் உபதேசத்தின்மேல் தங்கள் விசுவாசத்தை கொண்டுள்ளார்கள். ஆதலால் அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல, மாறாக அதனாசியஸ் மார்க்கத்தார். திரித்துவம் அதனாசியஸ் மார்க்கம்.

10. நாம் தேவனுடைய முன்னறிதல் (Foreknowledge) முன்குறித்தல் (Predestination) குறித்து ரோ.8:28-30 வசனங்களில் தியானிக்கிறோம். தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை முன்குறித்திருக்கிறார். இப்பொழுது கவனியுங்கள் தேவன் எங்கும் உள்ளவர். எங்கும் வியாபித்திருக்கிறவர் (God is omnipresent) அதாவது ஒரே நேரத்தில் எங்கும் பிரசன்னமாயிருக்கிறவர் (Present everywhere at the same time) உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.(சங்.139:7) யாவனாகிலும் தன்னை நான் காணதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளகூடுமோ? நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர். (எரே.23:24) ஆதலால் தான் இயேசு கப்பர்நகூமில் இருந்தபோது, இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்கிறார். (மத்.18:20) சிலர் இருப்பேன் என்று கூறியதாக உச்சரிக்கிறார்கள். அது தவறு. இருப்பேன் என்று கூறாமல் இருக்கிறேன் என்றே கூறினார். நமது தேவன் **இருக்கிறேன்** என்பவர். (யாத்.3:14)

11. இவ்வாறாக தேவன் எவர்களை முன்னறிந்தாரோ (Foreknowledge) அவர்களை முன்குறிக்கிறார்(Predestination) அவர்களை அழைக்கிறார் (Calling) அவர்களை நீதிமான்களாக்குகிறார். (Justified) அவர்களை மகிமைபடுத்துகிறார் (Glorified) இவ்வாறாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலரே. (மத்.22:14) பாருங்கள் கிறிஸ்து உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என வெளி.13:8-ல் வாசிக்கிறோம். உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவின் மணவாட்டி அவருக்குள் தெரிந்துகொள்ளப்பட்டாள். (எபே.1:4) அவர்களுடைய பெயர்கள் உலகத்தோற்றம் முதல் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதிவைக்கப்பட்டுள்ளது. (வெளி.13:8) தேவன் தம்முடைய மணவாட்டியை முன்னறிந்து, முன்குறித்து ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். நமது மத்தியில் ஒரு பாட்டு உண்டு. “ வருவாய் தருணுமிதுவே அழைக்கிறாரே, வல்ல ஆண்டவர் இயேசுவண்டை” இதில் ஒரு கவி கீழ்கண்டவாறு உள்ளது. “சத்திய வாக்கை நம்பியே வா, நித்திய ஜீவன் உனக்களிப்பார், உன் பேரை ஜீவபுஸ்தகத்தில் உண்மையாய் இன்றே எழுதிடுவார்” இது முற்றிலுமாக வேதவாக்கியங்களின் அடிப்படையில் தவறாக கருத்தை உடைய கவி. தேவன் உன் பெயரை ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னே எழுதி வைத்துள்ளார்.

12. தேவன் சகலத்தையும் அறிந்த, எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்த சர்வஞானி. தேவன் அறியாதது ஒன்றுமில்லை. (God is omniscient 1கொரி.2:10) தீர்க்கதரிசியாக எரேமியா தன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்னரே அவனை அவர் அறிந்திருந்தார். (எரே.1:5) யூதாஸ் தன்னை காட்டி கொடுப்பான் என்பதை அறிந்திருந்தார். (மத்.26:25) பேதுரு தம்மை அறிந்திருக்கவில்லை என்று மூன்று முறை மறுதலிப்பான் என்பதையும் அறிந்திருந்தார். (மத்.26:34) ஆக தேவன் சகலத்தையும் அறிந்த சர்வஞானியாக இருப்பதால், ஆதி முதல் அந்தம் வரை நடந்த, நடந்துக்கொண்டிருக்கின்ற, இனி நடக்கப்போகிற அனைத்து சம்பவங்களையும் முன்கூட்டியே அது நடப்பதற்கு முன்னே அறிகிறவராயிருக்கிறார். அப்படியானால் தேவன் உலக தோற்றம் முதல் உலகம் முடியும் வரை தம்முடைய கிரியைகள் அனைத்தையும் அறிந்திருந்தவராக, தெரிந்திருக்கிறவராக இருக்கிறார். (அப்.15:18) அதோடு மட்டுமல்ல அவருடைய கிரியைகள் உலகத்தோற்றம் முதல் முடிவு பெற்றதாயும் இருக்கிறது (எபி.4:3) (சங்.139:16,4) தேவன் நேற்று ஒன்றை யோசித்து செய்தவரும் அல்ல. இன்று ஒன்றை தீர்மானித்து செய்கிறவரும் அல்ல. நாளை ஒன்றை யூகித்து செய்யப்போகிறவரும் அல்ல. அவருடைய கிரியைகள் அனைத்தும் உலகத்தோற்றம் முதலே முடிவு பெற்றுவிட்டது. இனி அதில் எந்த விதமான மாற்றமும் இருக்க முடியாது. பாருங்கள் காலேப் யோசுவா அவருடைய நித்திய சிந்தனையில் இருந்தார். ஆதலால் அவர் அவரை உலகத்தோற்றத்திற்கு முன்னரே அறிந்து, தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய சுவிசேஷகனாக தெரிந்துகொண்டார். ஆதலால் அவருடைய தெரிந்துகொள்ளுதலில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. அவர் அழைக்கப்பட்டது முதல் இன்று வரை ஒரே பணியில் தான் இருந்து வருகிறார். நேற்று தன்னை பாஸ்டராகவும் இன்று தன்னை சுவிசேஷகனாகவும், நாளை தன்னை தீர்க்கதரிசியாகவும், இண்டர்நெஷனல் பிரசங்கியாகவும் அழைத்துக்கொள்ளப்போவது இல்லை. இதெல்லாம் தங்கள் அழைப்பை உறுதிபடுத்த முடியாமல் தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்களுடைய நிலை தடுமாற்றம். ஆக தேவன் காலாகாலங்களில் ஒன்றை யோசித்து, யோசித்து அவைகளை அவ்வப்போது செய்வது இல்லை. எனென்றால் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபி.13:8) இவ்வாறாக தேவன் தம்முடைய முன்னறியும் அறிவைக்கொண்டு, சம்பவங்களை அது நடப்பதற்கு முன்பே அறிந்து, அவ்வாறு அறியப்பட்ட ஒரு மனுஷருடைய நிலையைக் கொண்டு அவனை முன்குறித்து தம்முடைய பணிக்கென்று தெரிந்துகொள்கிறார், நியமிக்கிறார். (ரோ.8:28-30, எபே.1:5,12, 1பேது.1:20) அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து அவர்களில் 12 பேரை தெரிந்துகொண்டு, அப்போஸ்தலர் என்று பெயரிட்டார். (லூக்.6:13) பாருங்கள் தமக்கு சித்தமானவர்களை தம்மிடத்தில் வரவழைத்தார். (மாற்.3:13,14) அவருக்கு பின் சென்ற சீஷர்கள் அனைவரையும் அல்ல.

13. தேவன் சர்வவல்லமையுள்ளவர் (God is Omnipotent) (லூக்.1:37) அதாவது All powerful. அவரால் கூடாத காரியங்கள் ஒன்றுமில்லை. அவரால் கன்மலை தண்ணீரை தடாகமாக மாற்றமுடியும். அவரால் கற்பாறையிலிருந்து நீரூற்றையும் கொண்டுவர முடியும். (சங்.114:8) அவரால் 5 அப்பங்களையும் 2 மீன்களையும் கொண்டு ஏறக்குறைய 5000 பேரை ஒரே வேளையில் போஷிக்க முடியும். (மத்.14:19-21) அவரால் மரித்து சரீரம் நாறிய பின்னும் லாசருவை உயிரோடு எழுப்ப முடியும் (யோ.11:39, 43, 44)

14. தேவன் சர்வஞானி – God is omniscient. அதாவது சகலத்தையும் அறிந்தவர். அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. ஞானம் தேவனுக்குரியது. Wisdom belongs to God (தானி.2:20) தேவன்

சர்வஞானியாக இருப்பதால் ஆதி முதல் அந்தம் வரை எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிவார். உலகத்தோற்றம் முதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகள் எல்லாம் தெரிந்திருக்கிறது. (அப்.15:18) Knows unto God are all His Works from the beginning of the World. இப்பொழுது தேவன் தம்முடைய முன்னறியும் (Foreknowledge) அறிவைக்கொண்டு எல்லாவற்றையும் முன்னறிகிறார்.(Foreknows) தேவனுடைய முன்னறிவு (Foreknowledge) குறித்து நீங்கள். 1பேது.1:2, அப்.2:23 ல் வாசிக்கலாம். **பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே** ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே கீழ்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் **தெரிந்துகொள்ளப்பட்ட** பரதேசிகளுக்கு (1பேது.1:2) தேவன் நிர்ணையித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய **முன்னறிவின்படியேயும்** ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசு. (அப்.2:23) தேவனுடைய முன்னறிதல் (Foreknows) குறித்து நீங்கள் 8:29, 11:20ல் தியானிக்கலாம். தேவன் எவர்களை முன்னறிந்திருந்தாரோ (ரோ.8:29) தேவன் தாம் முன்னறிந்துக்கொண்ட தம்முடைய ஜனங்களை தள்ளிவிடவில்லை. (ரோ.11:2) ஆக தேவன் தம்முடைய முன்னறியும் அறிவைக் கொண்டு நடக்கப்போகும் ஒன்றை முன்பே அறிவார். அதாவது தேவன் தம்முடைய (அ) முன்னறியும் அறிவைக் கொண்டு (ஆ) நடக்கக்போகும் சம்பவங்களை முன்னறிந்து (இ) அவ்வாறு நடக்கப்போகும் சம்பவங்களை முன்பாகவே அறியப்பட்டதைக்கொண்டு ஒன்றை / ஒருவரை முன்குறிக்கிறார். முன் நியமிக்கிறார். முன் குறித்தல் குறித்து ரோ.8:29,30, எபே.1:5,12 ல் வாசிக்கிறோம். தேவன் எவர்களை முன்னறிந்தாரோ தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறிக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ, அவர்களை அழைத்தும் இருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியும் இருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைபடுத்தியும் இருக்கிறார். (ரோ.8:29,30) அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்துகொண்டார். (எபே.1:5) நாம் முன்குறிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபே.1:12) கிறிஸ்து உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிந்தார். (Foreordained before the foundation of the world) ஆக உலகத்தோற்றத்திற்கு முன்னே அவர் தம் முன்னறியும் அறிவைக்கொண்டு, முன்னறிந்து, முன்குறித்து முன்நியமித்தல் யாவும் நடக்கிறது. ஆம், அவர் நினைத்திருக்கிறபடியே நடக்கும். அவர் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்கிறார். (ஏசா.14:24)

15. இயேசு :
(அ) உலகத்தோற்றத்திற்கு முன்னே முன்குறிக்கப்பட்டவர். (1பே.1:20)
(ஆ) உலகத்தோற்றத்திற்கு முன்னே பிதாவினால் அன்பு கூறப்பட்டார். (யோ.17:24)
(இ) முன்னறிவிப்பின்படியே ஒப்புக்கொடுக்கப்பட்டார். (அப்.2:23)
(ஈ) உலகத்தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி. (வெளி.13:8)

16. கிறிஸ்துவின் மணவாட்டி :
(அ) உலகத்தோற்றதிற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துக்கொள்ளப்பட்டாள். (எபே.1:4)
(ஆ) அவளுடைய பெயர்கள் உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. (வெளி.13:8)
(இ) அவளுடைய வாயில் சொல் பிறவாததற்கு முன்னே அவர் அவளை அறிந்திருக்கிறார். (சங்.139:4)

17. தேவன் :
(அ) தேவனுடைய கரம் முன்குறித்தவை யாவையும் செய்யும். (அப்.4:27)
(ஆ) தேவனுடைய கிரியைகள் யாவும் உலகத்தோற்றம் முதல் முடிவு பெற்றது. (எபே.4:3)
(இ) தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னே, ஒருவனை அறிந்து, அந்த அறிவின்படி அவனை முன்குறித்து, அவனை அழைக்கிறார். எப்படியெனில் ஏசாவை நான் வெறுத்தேன். யாக்கோபை நான் நேசிக்கிறேன். (ரோ.9:11-24) ஏனென்றால் ஏசா, யாக்கோபுக்கடுத்த காரியங்களை அவர் முன்அறிந்திருந்தார்.
(ஈ) தேவன் ஆபிரகாமை தெரிந்துகொண்டார். (நெகே.9:7)
(உ) மோசேயை தெரிந்துகொண்டார். (சங்.106:23)
(ஊ) தாவீதை தெரிந்துகொண்டார். (சங்.78:70)
(எ) செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலை தெரிந்துகொண்டார். (ஆகாய்.2:23)
(ஏ) சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக தெரிந்துகொண்டார். (1சாமு.10:24)
(ஐ) எரேமியாவை தீர்க்கதரிசியாக தெரிந்துகொண்டார் (எரே.1:5)
(ஒ) கர்த்தருக்கு பணிவிடை செய்ய, அவருக்கு முன்பாக நிற்க, அவருக்கு ஊழியம் செய்ய, தூபம் காட்ட லேவியரை தெரிந்துகொண்டார். (2நாளா.29:11)
(ஓ) பரிசுத்தவான்கள் பூரணப்படும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் காலேப் யோசுவாவை சுவிசேஷகனாக தெரிந்துக்கொண்டார். (எபே.4:12,13)

18. பொதுவாக
(அ) கூடுமானால் தெரிந்துகொள்ளபட்டவர்களையும், வஞ்சிக்கதக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் கள்ள கிறிஸ்துக்களும், கள்ளதீர்க்கதரிசிகளும் எழும்பி செய்வார்கள். ஆனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க முடியாது. (மத்.24:24) பாலாசீர்லாறி, வேலூர் தாமஸ், காக்குவ்பிலிப்பு, டால்டன் புரூஸ், ரிச்சர்டு கேன், கொழும்பு ஜோர்ஜ் எலியேசர் போன்றவர்கள் தெரிந்துகொள்ளபட்டவர்களை வஞ்சிக்க முடியாது.
(ஆ) தெரிந்துகொள்ளபட்டவர்களுடைய அழைப்பை, ஊழியத்தை யாராலும் நிறுத்தமுடியாது. நிச்சயமாக காலேப் யோசுவா ஊழியத்தை யாராலும் தடைசெய்ய முடியாது. அது தொடர்ந்து கொண்டிருக்கும். ஏனென்றால் இவர்கள்

ஜனங்கள் மத்தியில் காணப்படும் அக்கிரமங்கள், அருவருப்புக்களுக்காக அநுதினமும் பெருமூச்சி விட்டு அழுகிற மனுஷர்கள். (எசே.9:4) நாள்தோறும் ஜனங்களுடைய, ஊழியக்காரர்களுடைய அக்கிரமக்கிரியைகளை கண்டு, கேட்டு நீதியுள்ள தங்கள் இருதயத்தில் வாதிக்கப்படுகிறவர்கள். (2பே.2:8)
(இ) இவர்கள் மாத்திரமே கோதுமைக்கும், களைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிகிறவர்கள். ஏனென்றால் உலகத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் அனைவரும் சிலுவையை கழுத்தில் தொங்கவிட்டுக்கொள்கிறார்கள். ஒருவன் தன் கழுத்தில் சிலுவை ஒன்றை தொங்கவிட்டுக்கொள்வது அவனை ஒரு உண்மையான கிறிஸ்தவனாக்காது. ஆமென், அல்லேலூயா! ஸ்தோத்திரம்! என்று ஆர்பரிக்கிறார்கள். ஆனால் இதில் கோதுமை எது களை எது என்று தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே பகுத்தறிய முடியும். பாருங்கள் கிறிஸ்தவர்கள் தான் உலகில் மெஜாரிட்டி என்கிறார்கள். ஆனால் உண்மை கிறிஸ்தவர்கள் அதை பகுத்தறிந்து, கிறிஸ்தவர்கள் உலகில் மைனாரிட்டி என்கிறார்கள். இதுதான் கோதுமைக்கும் களைக்கும் உள்ள வித்தியாசத்தை பகுத்தறிதல்.

(ஈ) நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம். பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்கு சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனம் என்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களை தெரிந்துகொள்ளவில்லை. நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். (உபா.7:6,7) நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரிய கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1பேது.2:9) இதுதான் தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் They are not selected but elected. Selection: பல ரகத்தில் பிடித்தமான ஒன்றை தெரிந்தெடுத்தல். Election : ஒரே ரகத்தில் பிடித்தமான ஒன்றை தெரிந்தெடுத்தல், இதுதான் Selection மற்றும் Electionக்கு உள்ள வித்தியாசம். நாம் தேவனால் Elected People. நீ இவ்வுலகத்தில் அதிகமாயிருப்பதினால் நான் தெரிந்துகொள்ளவில்லை. நீ கொஞ்சமாக இருந்தாலும் நான் உன்னை தெரிந்துகொண்டேன். இதுதான் தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின் சுயாதீனம். இதைகுறித்து யாரும் அவரிடம் கேள்வி கேட்க முடியாது. தேவன் தம்முடைய மணவாட்டியை எலெக்ஷன் மூலமாக தெரிந்தெடுக்கிறார். செலெக்ஷன் என்பது பலவகைகளிலிருந்து ஒன்றை தெரிந்தெடுப்பதாகும். ஆதாவது மாம்பழத்தில் பல ரகங்கள், வகைகள் உண்டு. அதில் உங்கள் மனவிருப்பப்படி ஒரு ரகத்தை தெரிந்தெடுப்பதாகும். ஆனால் எலெக்ஷன் என்பது ஒரே தன்மை ஒரே தகுதியிலிருந்து ஒன்றை தெரிந்தெடுப்பதாகும். அதாவது ஒரு கம்பெனியில் மேனேஜர் பதவிக்கு விண்ணப்பம், அதில் மேனேஜர் எப்படிப்பட்ட தகுதிகளை கொண்டவராக இருக்க வேண்டும் என்பதான தகுதிகள் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த தகுதிகளை உடையவர்களில் பலர் விண்ணப்பிப்பார்கள். ஆனால் ஒரே தகுதியுடைய பலரில் ஒருவர் தான் தேர்ந்தெடுக்கப்படுவார் அதுதான் எலெக்ஷன் ஆகும்.

19. இப்பொழுது தேவன் அவருடைய குறிப்பிட்ட சில பணிக்காக சில நபர்களை தெரிந்தெடுத்துக்கொள்கிறார். It is the sovereign at of God where by certain persons are chosen for distinctive services. உதாரணமாக 12 பேரை தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார். (லூக்.6:13) என்னுடைய நாமத்தை அறிவிக்க நான் தெரிந்துகொண்ட பாத்திரம் என பவுலை குறித்து கூறிகிறார். (அப்.9:15) திஸ்பியனாகிய எலியாவை பராமரிக்கும்படி சீதோனுக்கடுத்த சாறிபாத்தில் ஒரு விதவை கட்டளை பெற்றிருந்தாள். (1ராஜா.17:9) சிலர் தேவனுடைய முன்னறியும் அறிவைக் கொண்டு முற்றிலுமாக கிருபையினால், கிரியைகளினால் அல்ல பிரத்தியேகமான பணிக்கு தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். It is according to the foreknowledge of God and Wholly by grace, apart from human merits. இதற்கு எடுத்துக்காட்டாக முந்தினகாலத்தில் நாம் யாக்கோபு, தாவீது, சாலொமோன், சிம்சோன் போன்றவர்களையும், இந்நாட்களில் காலேப் யோசுவா போன்றவர்களையும் காணலாம். This is not by merit but by grace. மூன்றாவதாக முற்றிலுமாக கிருபையினால் அவருடைய அநாதிதீர்மானத்தின்படி சில நபர்களை தமக்காக தெரிந்தெடுக்கிறார். It is the sovereign act of God in grace by certain persons from man kind for himself. (யோ.15:16,19) நீங்கள் என்னை தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களை தெரிந்துகொண்டேன். நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டேன். தேவன் எருசலேமை தெரிந்து கொண்டார். (1ராஜா.11:13) அவருடைய நாமம் என்னென்றைக்கும் விளங்க தெரிந்துகொண்ட நகரம் எருசலேம் மற்றும் அதிலுள்ள ஆலயம். (2ராஜா.21:7, 23:27) தேவன் அன்று அவருடைய நாமம் விளங்க எருசலேமை தெரிந்துகொண்டார். (2நாளா.6:6, 12:13) இப்பொழுது நம்மை அவர் வாசம் செய்யும் ஆலயமாக தெரிந்துகொண்டார். (1கொரி.3:16)

20. இவ்வாறாக தெரிந்துகொள்ளுதல் தேவனுக்கடுத்த காரியம். பாருங்கள் அநேகர் கல்லூரிகளில் படித்து முடித்து பட்டங்கள் பல பெற்று ஊழியத்திற்கு வருகிறார்கள். உதாரணமாக சி.எஸ்.ஐ. மற்றும் ஈ.சி.ஐ. சபைகளின் போதகர்கள். நிச்சயமாக இவர்கள் தேவனுடைய அழைப்பை பெறாத ஒரு ஸ்தாபனத்திற்கு ஊழியம் செய்து ஊதியம் பெறும் பணிவிடை ஆட்களே. பொதுவாக ஸ்தாபன ஊழியக்காரர்கள் யாவரும் தேவனால் அழைக்கப்படவில்லை. அவர்கள் ஒரு ஊதியத்தை பெற்று ஸ்தாபனத்திற்காக ஊழியம் செய்கிறார்கள். அந்த ஸ்தாபனம் தான் ஆதாயப்படுத்திக்கொண்ட ஜனங்களிடமிருந்து காணிக்கை தசமபாகம் பெற்று பின் கொடுக்கிறவர்களையே தங்களுக்கு அடிமையாக்கி அவர்களை ஆளுகிறார்கள். இது என்ன கொடுமை பாருங்கள்? ஜனங்கள் அந்த அளவிற்கு பேதைகளாக இருக்கிறார்கள். ஆக உண்மையான கிறிஸ்தவர்கள் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (எபே.1:4) இவர்கள் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயிருக்கிறார்கள். (எபே.5:30) இவர்கள் தேவனுடைய சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறார்கள். பிறப்பதற்கு முன்னே பேரிடப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் ஒன்றையும் அவர் இழந்து போவதில்லை. (யோ.6:39) அதற்குரிய உறுதியும் (Assurance) பாதுகாப்பும் (Security) இவர்கள்

கொண்டவர்கள்.(யோ.10:28)

21. கவனியுங்கள். நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவன் என்று விசுவாசிக்கலாம். விசுவாசித்து அவருடைய நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம். நீங்கள் கொர்நேலியுவைப்போன்று தேவபக்தியுள்ளவர்களாயிருந்து அநேக தானதர்மங்களை செய்பவர்களாயிருக்கலாம். நீங்கள் அனைவராலும் குற்றம் சாட்டப்படாதவர்களாகயிருக்கலாம். பாருங்கள், நான் எதினாலே தவறினேனோ அதை எனக்கு தெரியப்படுத்துங்கள். நான் திருத்திக்கொள்ளுகிறேன் என்ற தாழ்மை குணம் யோபுவைப்போன்ற கொண்டவர்களாக இருக்கலாம். (யோபு.6:24) நீங்கள் மதுபான பிரியர் அல்ல, பணபிரியர் அல்ல, தற்பிரியர் அல்ல, இல்லற வாழ்க்கையில் ஒரே மனைவியை உடையவராக இருக்கலாம், ஸ்டெப்பினிக்கு இடம் கொடுக்காமல் இல்லறவாழ்க்கை கொண்டவர்களாக இருக்கலாம், தன் குடும்பத்தை நல்ல முறையில் நடத்துகிறவர்களாக இருக்கலாம். (1தீமோ.3:4,5,12) எந்த காரியத்திலும் உண்மையும் உத்தமுமாக நடந்துக்கொள்ளலாம். நீங்கள் எப்பொழுதும் உபவாசத்திலும், ஜெபத்திலும் தரித்திருக்கலாம். மாதம் ஒரு நாள் உபவாசம், தினமும் 3 முதல் 5 வேளை ஜெபிக்கிறவர்களாக இருக்கலாம். இவை அனைத்தும் ஒரு கிறிஸ்துவ வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதுதான். ஆனால் இவை அனைத்தும் தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதலுக்கு ஒரு தகுதி ஆகாது. இந்த தகுதிகள் உடையவர்கள் அனைவரையும் தேவன் தெரிந்தெடுப்பதில்லை. மாறாக இந்த தகுதிகள் உள்ளவர்களில் ஒரு சிலரையே அவர் தெரிந்தெடுக்கிறார். அது அவருடைய சுதந்தரம், அவருடைய சுயாதீனம், அவருடைய தீர்மானம். இவ்வாறாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவருடைய மணவாட்டி. அவர்கள் எடுத்துக்கொள்ளபடுதலில் பங்கு பெறுவார்கள். அப்படியானால் தகுதியுடைய மற்றவர்களின் நிலை என்ன? மற்றவர்கள் மணவாட்டி ஆக முடியாது. அதேவேளையில் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள்.

22. கவனியுங்கள். மேலும் ஒரு எடுத்துக்காட்டு. நான் கடையிலிருந்து எனக்கு சட்டை தைக்க 2 ½ மீட்டர் துணி வாங்கி வந்தேன். பாருங்கள் 2 ½ மீட்டர் துணிக்கு முழு கிரையம் செலுத்தி அதை என்னுடையதாக்கி கொண்டேன். ஆனால் எனது சட்டை தைக்க அதிலிருந்து 2 ¼ மீட்டர் துணி எடுத்துக்கொள்ளப்பட்டது. ¼ மீட்டர் துணி துண்டாக மீதமானது. அதை உபயோகிக்க முடியாது. அதற்கு தேவையும் இல்லை. உபயோகிக்க முடியாவிட்டாலும், தேவைபடாவிட்டாலும் இந்த ¼ மீட்டர் துணி பிரயோஜனத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட 2 ¼ மீட்டர் துணியிலிருந்து எந்த அளவிலும் தகுதியில் குறை கொண்டது அல்ல. அதாவது தரத்தில் குறைபட்டது அல்ல. ஆனாலும் அது தேவையில்லை என கழிக்கப்பட்டது. 2 ½ மீட்டர் துணியில் 2 ¼ மீட்டர் துணி மாத்திரம் எடுத்துக்கொள்ளப்பட்டு சட்டை தைக்க உபயோகப்படுத்தப்பட்டது. மீதி ¼ மீட்டர் கழிக்கப்பட்டது. கழிக்கப்பட்ட துணி அதே தரத்தை உடையதாக இருந்தாலும், அதற்கென்று கிரையம் செலுத்தப்பட்டாலும் அது தேவையில்லை என கழிக்கப்பட்டது. இதுதான் தெரிந்துகொள்ளுதல். ஒரே ரகம், ஒரே தரம் அதில் ¼ மீட்டர் கழிக்கப்பட்டது. அது போன்று பரிசுத்தவான்களின் மத்தியில் ஒரு சாரார் மாத்திரமே தேவனால் தம்முடைய மணவாட்டியாக தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். இரத்தத்தினால் கிரையம் செலுத்தி மீட்கப்பட்ட அனைவரும் மணவாட்டியாவது கிடையது.

23. மற்றொரு எடுத்துக்காட்டு. இதில் ஆண் பெண் இனச்சேர்க்கையின் போது ஆணிடமிருந்து விந்துவும் பெண்ணிடமிருந்து முட்டையும் வெளிவருகிறது. ஆணின் விந்துவில் பல லட்சக்கணக்கில் விந்தணுக்கள் காணப்படுகின்றன. இந்த பல லட்சம் விந்தணுவில் ஒரு விந்தணு மாத்திரமே பெண்ணிடமுள்ள முட்டையுடன் சேர்கிறது. அதில் எந்த விந்தணு முட்டையோடு ஒன்றாக சேர முடியும் என்று முன்னறிந்து சொல்ல முடியாது. இந்த விந்தணுவில், அங்கே அதில் ஒன்றுதான் ஜீவிக்கும்படியாக தேவனால் முன்குறிக்கப்பட்டிருக்கிறது. மற்றவைகள் யாவும் மரித்துவிடும். அது முதலாவதாக சந்திக்கின்ற ஒன்றல்ல. அது முதலாவது முட்டையோடு சேருகின்ற ஒன்றாயிருக்கிறது. அந்த விந்தணு முட்டைக்குள்ளாக ஊர்ந்து செல்கிறது. அதனுடைய சிறிய வால் போன்ற பகுதி மறைந்து விடுகிறது. அங்கே முதுகுத்தண்டு வளரத் துவங்குகிறது. அந்த முழுக்கூட்டத்திலுமே ஒன்றே ஒன்றுதான், அதாவது சுமார் 10 லட்சத்தில் முட்டையோடு சேரப்போகிறது ஒன்றே ஒன்றுதான். இது தேவனால் தீர்மானிக்கப்படுகிறது. இயற்கையாகவே அவைகள் யாவுமே ஒரு மாதிரியாக காணப்படுகின்றன. ஆனால் அங்கே ஜீவனுக்கென்று தேவனால் ஒன்றே ஒன்று தான் நியமிக்கப்பட்டிருக்கிறது. பாருங்கள் திருஷ்டாந்தமாக சுமார் 10 லட்சத்தில் ஒன்றுதான் முன்குறிக்கப்பட்டது, தீர்மானிக்கப்பட்டது, தெரிந்துகொள்ளப்பட்டது.

24. இஸ்ரவேல் எகிப்தை விட்டு சென்ற போது ஆண், பெண், பலஜாதியான ஜனங்கள், குழந்தைகளுமாக மொத்தம் 20 லட்சம் பேர் இருந்தார்கள் என சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் மோசே, ஆரோன் தீர்க்கதரிசிகளின் செய்திகளை கேட்டார்கள். அக்கினி ஸ்தம்பத்தினாலும், மேக ஸ்தம்பத்தினாலும் இரவும் பகலும் வழிநடத்தப்பட்டார்கள். மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சிவந்த சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.(1கொரி.10:2) மிரியாமோடு சமுத்திரத்தின் கரையில் மேலும் கீழுமாக ஓடி ஆடி, தம்பூரு வாசித்து ஆவியில் நடனமாடினார்கள், கூச்சலிட்டார்கள். ஞானகன்மலையின் தண்ணீரை குடித்தார்கள். ஒவ்வொருவரும் அநுதினமும் புதிய, தூதர்களின் மன்னாவை புசித்தார்கள். ஆனாலும் திருஷ்டாந்தமாக சுமார் 20 லட்சத்தில் 2 பேர்தான் கானான் தேசத்தில் பிரவேசித்தனர். இதுதான் தெரிந்துகொள்ளுதல்.

25. கணவன், மனைவி : கணவன் மனைவிக்கடுத்தகாரியத்தில் ஆதாமுக்கு தன் துணையை தேர்ந்தெடுக்க தேவையில்லாமல் போய்விட்டது. தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். தேவன் அவன் விலாஎலும்புகளில் ஒன்றை எடுத்து, எடுத்த விலா எலும்பை மனுஷியாக

உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். ஆதாம் : இவள் என் எலும்பின் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள்; இவள் மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்று றி அவளை தன் மனைவியாக ஏற்றுக்கொண்டான். (ஆதி.2:21-24) ஆக இங்கு ஆதாமின் மனைவியை தேவன் தாமே அவனுக்கு அவன் சரீரத்திலிருந்து எடுத்துக்கொடுத்தார். மனைவியை தெரிந்தெடுக்கும் உரிமை அவனுக்கு கொடுக்கப்படவில்லை. அவன் பின் சந்ததியார் அனைவருக்கும் தங்கள் மனைவியை தெரிந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டது.

26. சிம்சோனுக்கடுத்த காரியத்தில் அவன் விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் அவிசுவாசியாகிய ஒரு பெண்ணை கொள்ள விரும்பினான். அவள் அவன் கண்களுக்கு பிரியமானவளாக இருந்தாள். ஆதலால் அவளையே தனக்கு மனைவியாக கொள்ள நினைத்தான். இன்று அநேக விசுவாசிகள் பணத்திற்காகவும், அழகுக்காகவும், படிப்புக்காகவும் அவிசுவாசியை திருமணம் செய்வது போன்று. முடிவில் அவள் அவனுடைய தோழிரில் சிநேகமாய் இருந்த வேறொருவனுக்கு கொடுக்கப்பட்டாள் (நியாயாதி.14:30,4,20) அதன்பின் சிம்சோன் ஒரு வேசியை கண்டு அவளிடத்தில் போனான். தன் இருதயத்தை எல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தினான். முடிவில் அவளால் அவன் மரணத்தை சந்தித்தான். என்னை பொறுத்த அளவில் அவனுடைய தெரிந்துகொள்ளுதல் சரியல்ல. அழகுள்ளவளும் வேசியும் அவனை மோசம் போக்கினார்கள். இன்றும் அநேகர் அவ்வாறாக மோசம் போகிறார்கள்.

27. அடுத்து லோத்துக்கடுத்த காரியத்தில் அவன் மனைவி உலக பற்றுடையவளாக காணப்பட்டாள். அவளுக்கு உலக பிரகாரமான பொன், பொருள் ஆஸ்தி மீது நாட்டம் அதிகமாக இருந்தது. அவள் உலகத்தை அதிகமாக நேசித்தாள். இந்நாட்களில் அநேக குடும்பங்களில் நான் இப்படிப்பட்ட மனைவிமார்களை கண்டிருக்கிறேன். புருஷன் சற்று ஆவிக்குரியவனாகயிருப்பான். ஆனால் அவர்களுடைய மனைவிகள் அவர்களை உலகத்திற்கடுத்த காரியங்களில் நாட்டம் கொள்ள செய்வார்கள். முடிவில் லோத்தின் மனைவி உலக மேன்மைகளையும், ஆஸ்திகளையும் பின்னிட்டு பார்த்து உப்புதூண் ஆனாள். (ஆதி.19அதி) அதே கதிதான் அந்த குடும்பத்திற்கும் நேரிடும்.

28. அடுத்து என்னை பொறுத்தளவில் யோபுவும் தன் மனைவியை தெரிந்தெடுப்பதில் தவறிவிட்டான். அவன் ஒரு பெரிய நீதிமானாகயிருந்தான். ஆனால் அவனுடைய மனைவியோ ஒரு அவிசுவாசியாகயிருந்தாள். யோபுவின் மனைவி அவனை பார்த்து : நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் நிலைநிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். (யோபு.2:10) பாருங்கள். அவள் தேவனை தூஷி என்றாள். அப்படியானால் நிச்சயமாக அவள் ஒரு அவிசுவாசியாகத்தான் இருக்கமுடியும்.

29. அடுத்து நீங்களும் உங்கள் மனைவியும் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் இருந்தால், ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்து மறுபிறப்பு அடைந்தவர்களாக, முந்தின நடத்தைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளிலாலே கெட்டுபோகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து விட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவி உள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டவர்களானால் உங்கள் தெரிந்துகொள்ளுதல் சரியாக இருக்கும். ஒருவர் இரட்சிப்பின் அனுபவத்திலும், அவன் மனைவி இரட்சிப்பின் அனுபவத்திற்குள் இல்லாது, மரணம் அவர்களை பிரிக்குமானால், அவர்கள் தெரிந்துகொள்ளுதல் தவறாகும். ஏனென்றால் கிறிஸ்துவிலிருந்து அவருடைய சரீரமாகிய சபையை (மனைவியை) பிரிக்க முடியவே முடியாது. அதுபோன்று உங்கள் தெரிந்துகொள்ளுதல் சரியாக இருக்குமானால் உங்களிடமிருந்து உங்கள் மனைவியை பிரிக்க முடியாது. ஏனென்றால் நீங்கள் இருவர் அல்ல, ஒரே சரீரம். ஆனாலும் அவிசுவாசி பிரிந்துபோனால் போகட்டும். (1கொரி.7:14) அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலையிலே நிலைத்திருக்க கடவன். (1கொரி.7:7,20)

30. ஆத்தும இரட்சிப்பும் தெரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் அமைத்துள்ளது. இரட்சிப்பு கர்த்தருடையது. (சங்.3:8, யோனா.2:9) அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும். (லூக்.18:26) இது மனுஷரால் கூடாததுதான். ஆனால் தேவனால் அது கூடும். (லூக்.18:27) ஏனெனில் பூமியின் நடுவில் இரட்சிப்புக்களை செய்து வருகிறவர் தேவன். (சங்.74:12) இரட்சிப்பு கர்த்தருடைய ஈவு. (எபே.2:8) பாருங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப்.16:31) அதேவேளையில் விசுவாசத்தை தொடங்குகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (எபி.12:1) அவரே ஒருவனிடத்தில் விசுவாசத்தை தொடங்க வேண்டும். ஒருவன் தன்னில் தானே விசுவாசத்தை வருவித்து, தொடங்கி கொள்ள முடியாது. அதேவேளையில் தேவனுடைய இரட்சிப்பு அவருக்கு பயந்தவர்களுக்கு சமீபம். (சங்.85:9) கவனியுங்கள் தேவ கிருபையே நமக்கு இரட்சிப்பை அளிக்கிறது. (தீத்.2:11) நாம் இரட்சிப்படையும்படிக்கு தேவன் நம்மை தெரிந்துகொண்டார். (2தெச.2:13) இதுதான் தெரிந்துகொள்ளுதல். இதில் யாரும் தலையிடமுடியாது. இது தேவனுடைய சுயாதீனம். இதில் நம்முடைய தகுதிகள் M.Th., டாக்டர், இண்டர்நேஷனல் பிரசங்கி, தலைமை போதகர் எதுவும் பெறுமை பாராட்ட இடமில்லை.

31. இப்பொழுது நம்முடைய இரட்சிப்புக்கு கொடுக்கப்பட்ட நாமம் பிதா குமாரன் பரிசுத்தஆவி அல்ல. இதில் இரட்சிப்பு கிடையவே கிடையாது. இவை அனைத்தும் தேவனுடைய பற்பல பதவிகள், இந்த பதவிக்குரியவரின் பெயர் ஒன்று உண்டு. அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதாகும். இதுதான் நம்முடைய இரட்சிப்புக்கென்று கொடுக்கப்பட்ட நாமம். (அப்.4:12) இதை விசுவாசிப்பவர்கள் யார்? நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள்தான், ஆத்தும இரட்சிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் உள்ளது என விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்படைகிறார்கள். (அப்.13:48) திரித்துவ ஸ்தாபன தலைவர்களும், அவர்களால் வழிநடத்தப்படும் விசுவாசிகளும் இதை விசுவாசிப்பதேயில்லை. அவர்கள் இரட்சிப்படையவும் இல்லை.

32. விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். (மாற்.16:16) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்பை பெறுகிறான். (அப்.10:43) நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். (அப்.2:38) ஆனாலும் சிலர் திருவசனத்திற்கு கீழ்படியாதிருந்து இடறுகிறார்கள். அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். (1பேது.2:8) இவர்கள், அதாவது விசுவாசியாதவர்கள் ஆக்கினைக்குள்ளாக்க தீர்க்கப்படுகிறார்கள். (மாற்.16:16) ஆக ஆசீர்வாதமும் சாபமும் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. (உபா.11:26) கீழ்படிதல் ஆசீர்வாதத்தை கொண்டுவருகிறது. (உபா.17:2) கீழ்படியாமை சாபத்தை கொண்டுவருகிறது. (உபா.17:28) ஆசீர்வாதத்திற்கும், சாபத்திற்கும் அதாவது இரக்கத்திற்கும், நியாயத்தீர்ப்பிற்கும் இடையே ஒரு கோடு உள்ளது. அதுதான் எச்சரிப்பின் கோடு. இந்த எச்சரிப்பின் கோட்டை தாண்டினால் மரணம் நேரிடும். கவனியுங்கள் அடிமைகளின் விடுதலை குறித்து நீங்கள் யாத்.21:6 ல் வாசிக்கலாம். விடுதலையை ஏற்க மறுத்தால் என்றென்றைக்கும் அடிமை தன் எஜமானை சேவிக்க வேண்டும். அதுபோன்று எனது திரித்துவ சபை விசுவாச நண்பர்களே உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிப்பின் கோட்டை கவனியுங்கள். காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளுங்கள். இப்பொழுதே நீங்கள் மனந்திரும்பி உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். இது ஒன்றே வழி. இதிலே நடவுங்கள்.

33. நாம் ஆராதனைக்காக செல்லும் சபையும் நமது தெரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் உள்ளது. நமது மத்தியில் அநேக சபைகள் பலவிதமான பெயர் பலகைகளுடன் அங்கும் இங்கும், மூலைமுடுக்குகளிலும், சந்து பொந்துகளிலும் உள்ளன. உலகம் முழுவதிலும் கிறிஸ்தவர்கள் மத்தியில் சுமார் 33,820 ஸ்தாபன சபைகள் உண்டு என அறிய வந்தேன். நான் வசிக்கும் மப்பேடு ஒரு சிறிய கிராமம். இங்கே பற்பல பெயர் பலகைகளுடன் சுமார் 15 சபைகளுக்குமேல் உண்டு. இவை அனைத்தும் கிறிஸ்துவையே பிரசங்கிப்பதாக கூறுகிறார்கள். இதில் ஒரு சபையில் ஒரு ஞாயிறு பிரசங்கத்திற்காக என்னை கூப்பிட்டார்கள். அன்று இரட்சிப்புக்குறித்து பேசி, அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் உள்ளது என பிரசங்கித்தேன். சபையார் மத்தியில் சற்று சலசலப்பு. மீண்டும் எனக்கு பாஸ்டர் அழைப்பு கொடுக்கவில்லை. பாருங்கள் இவர்கள் அப்போஸ்தலர்களை போன்று கிறிஸ்து இயேசுவே கர்த்தர் என்றும் (2கொரி.4:5), இயேசுவே கிறிஸ்து என்றும், இரட்சிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் மாத்திரமே உள்ளது என்றும் பிரசங்கிப்பது இல்லை. (அப்.5:42, அப்.17:3, அப்.4:.12) தங்கள் பாரம்பரிய பிரமாணங்களையும், தத்துவங்களையும், உபதேசங்களையும் பிரசங்கிக்கிறார்கள். தங்களுடைய பல திட்டங்களை மக்கள் முன் வைத்து, சபைகட்ட, மணிமண்டபம் கட்ட, திருமண மண்டபம் கட்ட, வியாபாரம் செய்ய மால் கட்ட இப்படிபட்டதான பல திட்டங்களை மக்கள் முன் வைத்து, ஊழியத்தின் பேரில் பணம் திரட்டுகிறார்கள். கிறிஸ்துவின் பேரில் பணம் சம்பாதிக்கிறார்கள். கிறிஸ்துவின் பேரில் தங்களுடைய கைகளின் பிரயாசம் இல்லாது ஆடம்பர வாழ்க்கை வாழ்கிறார்கள். விசுவாசிகளிடமிருந்து காணிக்கை, தசமபாகம் பெறும் ஊழியர்கள் கொடுக்கும் விசுவாசிகளைவிட நல்ல வசதிவாய்ப்புடன் வாழ்கிறார்கள். கிறிஸ்துவின்பெயரில் தங்கள் வாரிசுகளுக்கு சொத்து சுகங்களை சேர்க்கிறார்கள். விசுவாசிகளின் பிள்ளைகள் அரசு பள்ளிகளில் படிக்கிறார்கள். ஊழியக்காரர்களின் பிள்ளைகளோ தனியாருடைய பெரிய பள்ளிகளில் லட்சக்கணக்கில் பணம் கட்டி படிக்கிறார்கள். ஊழியர்களின் உள்ளத்தில் தெய்வ பயம், பக்தி எதுவும் ஒரு எள் அளவுக்கூட கிடையாது. எல்லாமே வெளிவேஷம். தங்கள் சபைகளில் உள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கைகளை கொண்டு நான் பெரியவன், நீ சிறியவன் என பெருமை பாராட்டுகிறார்கள். சபையில் ஆரம்பகாலத்தில் இருந்ததுபோல இன்றும் சபையில் உள்ள ஐசுவரியவான்களுக்கு மாத்திரமே, மதிப்பு, மரியாதை, கனம் உண்டு. (யாக்.2:2-4)

34. விசுவாசத்திற்கடுத்த காரியத்திலும் சபைகளில் ஒரே விசுவாசம் கிடையாது. ஒரு சபையில் பெண்கள் நகை அணியலாம். மற்றொரு சபையில் அணியக்கூடாது என்ற உபதேசம். ஒரு சபையில் பெண்கள் வேலைக்கு செல்லக்கூடாது. அடுத்த சபையில் வேலைக்கு சென்று வந்து குடும்ப பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதாகும். ஒரு சபையில் பெண்கள் தலையில் முக்காடு போடக்கூடாது. அடுத்த சபையில் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும். ஒரு சபையில் ஞானஸ்நானம் தேவை, மற்றொன்றில் தேவையில்லை. ஒரு சபையில் இராப்போஜனம் தேவை. அடுத்ததில் தேவையில்லை என பற்பல உபதேசங்களை கொண்டு ஒருவருக்கொருவர் நாளுக்குநாள் பிரிந்துக்கொண்டே செல்கிறார்கள். ஆதலால் அவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் சரீரமோ, அந்த சரீரத்தின் அவயவங்களோ கிடையாது. ஏனென்றால் இவர்கள் பிரிந்திருக்கிறார்கள். (1கொரி.1:12,13) மேலும் பாருங்கள் ஒரு சாரார் நாங்கள் கிறிஸ்து பிரன்ஹாம் கூட்டத்தார் என்கிறார்கள். நாங்கள் ரிச்சர்டு கேனை சார்ந்த கூட்டத்தார் என்கிறார்கள். ஒருவர் நாங்கள் காக்குவ் பிலிப்புவின் அடிமைகள் என்கிறார்கள். மற்றொரு சாரார் டால்டன் புரூஸை ஆதரிப்பவர்கள் என்கிறார்கள். இது எல்லாம் என்ன? கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தினர், கூலியாட்கள். ஆக இந்த பிரிவினையினால் சகோதரர்களுக்குள்ளே வாக்குவாதம் (நீதி.6:19, ரோ.16:17,18) இவர்கள் தங்களது வாயினால் தேவனிடத்தில் சேர்ந்து, தங்களது இருதயத்தில் அவரை விட்டு விலகி (மத்.15:8,9) தங்களுக்கு பணம் கொடுக்கும் மனிதர்களுக்கு நேராக தங்கள் இருதயத்தை திருப்பி விட்டார்கள். களைகளாகயிருந்துக்கொண்டு பிரன்ஹாம், பிரன்ஹாம் என்று கூச்சலிடும் கூட்டமே உனக்கு ஐயோ! நீங்கள் அறுப்பு காலத்தில் சுட்டெரிக்கப்படுவீர்கள்.

35. இந்நிலையில் நீங்கள் போக இருக்கும் சபையை தெரிந்துகொள்ளுதல் மிக்க அவசியம். இந்த தெரிந்துகொள்ளுதலின் அதிகாரம் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது நீங்கள் சேரப்போகும் சபை உங்களை நித்தியத்துக்குள் வழிநடத்துமா என்று சோதித்துப்பார்க்க வேண்டும். அந்த சபை பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுகிறதா என்று அறிதல் மிக்க அவசியம். (1பேது.1:12) அந்த சபை சத்தியத்திற்கு தூணும், ஆதாரமாய் இருக்கிறதா என சோதித்து பார்க்க வேண்டும். (1தீமோ.3:15) மேலும் அந்த சபை அந்தந்த காலத்திற்குரிய

ஆகாரத்தை தருகிறதா அல்லது இன்னும் நேற்றைய பழைய கஞ்சியைத்தான் கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்களா என ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்த வீடு ஆதி அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறதா (எபே.2:20) அல்லது காக்குவ்பிலிப்பு, டால்டன் புரூஸ், ரிச்சர்டு கேன். ஜோர்ஜ் எலியேசர் போன்ற மாறுபாடனவர்களின் உபதேசத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறதா என கவனிக்க வேண்டும். அந்த வீட்டின் அதிகாரி யார்? (எபி.10:21) மல்டி லெவல் மார்க்கெட்டிங் தொழில் அதிபரா? அல்லது ரியல் எஸ்டேட் புரோக்கர்களா? இரண்டு அல்லது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறு குடும்பங்களை கொண்டவர்களா? மனைவி ஒரு பக்கம் பிள்ளைகள் ஒருபக்கம் சபை கூடுதலுக்கு செல்கிறவர்களா? ஊழியக்காரனின் மனைவி மினி பாஸ்டர்களாக இருந்துக்கொண்டு சபைஊழியம் செய்கிறவரா? தசமபாகம், காணிக்கை மீது கண்ணும் கருத்துமாக இருந்து ஊழியம் செய்கிறவர்களா? பணத்திற்காகவே காலை முதல் மாலை வரை ஊர் ஊராக சுற்றித்திரிந்து ஞாயிறு மட்டும் சபை நடத்துகிறவர்களா? அல்லது திங்கள் முதல் சனி வரை பொதுப்பணி ஸ்தலங்களில் பணிபுரிந்து அங்கு ஞாயிறு விடுமுறை என்பதால், ஞாயிறு மட்டும் சபைஊழியம் செய்கிறவரா? அதாவது இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவரா? அல்லது திரித்துவ சபையே உனக்கும் பே, பே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உள்ள சபையே உனக்கும் பே, பே எனக்கூறிக்கொண்டு பணம் சம்பாத்தியத்தை குறிக்கோளாக கொண்டுள்ள மாய்மாலக்காரனா? இவ்வாறாக நான் அநேக காரியங்களை எழுதிக்கொண்டே போகலாம். நீங்கள் தான் உங்கள் சபை பாஸ்டர்களை சோதித்தறிந்து அங்கு சென்று சபைகூடுதலில் பங்கு கொள்ள வேண்டும். ஆனால் பாஸ்டர்களை தெரிந்தெடுப்பதில் மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பது எனது கருத்துக்கணிப்பு.

36. எனக்கு சென்னை பட்டிணத்தில் இரு இடங்களில் உள்ள சபைகளைக் குறித்து, பாஸ்டருடைய பெயர்களை குறிப்பிடாமல் எழுத ஆவியின் வழிநடத்துதல். ஆனாலும் விசுவாசிகள் யாரை குறித்து நான் எழுதியுள்ளேன் என்பதை நன்கு நிதானித்துக்கொள்வார்கள். சென்னையில் வளசரவாக்கத்தில் ஒரு சபை உண்டு. சென்னையில் உள்ள பெரிய சபைகளில் ஒன்று. சற்று கூட்டம் இருக்கும். இங்குள்ள பாஸ்டர் ஐந்து வகை ஊழியங்களை குறித்து பகுத்தறிந்து நிதானிப்பதில்லை. ஐந்து வகை ஊழியங்களும் தனக்கே உரியது எனக் கூறி அதன்படி செயல்படுகிறார். அதாவது தானே பாஸ்டர், தானே அப்போஸ்தலன், தானே தீர்க்கதரிசி, தானே சுவிசேஷகன், தானே போதகன். சபை பக்திவிருத்திக்கடுத்த ஊழியங்கள் அனைத்தும் தனக்கே உரியதாக எண்ணி செயல்பட்டு வருகிறார். சபையில் அவரைத்தவிர வேறுயாருக்கும் அனுமதி கிடையாது. ஆனால் கவனியுங்கள். ஐந்து வகை ஊழியத்தில் ஒவ்வொரு ஊழியமும் தனித்தன்மை வாய்ந்தது. ஐந்து வகை ஊழியத்தில் உள்ளவர்களில் ஒருவருக்கு ஒரு ஊழியம் மாத்திரமே. ஆக இந்த சபையில் இதர நான்கு வகை ஊழியங்களை கொண்டு சபை பக்திவிருத்தி அடைய கூடாதபடி ஒரு தடை கல்லாக பாஸ்டர் இருந்து வருகிறார். சபை வளர்ச்சியில் அதை ABCD நிலையிலே நிலை நிற்க வைத்துவிட்டார். சபை வளர்ச்சியில் அது முதுமை / பூரணம் அடைய முடியவில்லை. சபையானது ஐந்துவகை ஊழியங்களை கொண்டு பரிபூரணம் அடைய வேண்டும். ஆனால் இவரோ சபை வளர்ச்சியை அதன் அடிமட்டத்திலே வைத்து விட்டார். இன்றுவரை விசுவாசிகளுக்கு பால் ஊட்டியே வளர்த்து வருகிறார். சபைவிசுவாசிகளும் இன்னும் பால் புட்டி ரப்பரையே சப்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

37. அடுத்து சென்னை பெரவலூரில் ஒரு சபை. சென்னையில் உள்ள சபைகளில் இதுதான் பெரியது. குளிர்சாதன வசதி கொண்ட சபை. ஒருகாலத்தில் சபை பாடலில் நான் மயங்கியது உண்டு. இதுவும் ஏறக்குறைய வளசரவாக்கம் சபையை போன்றதுதான். வளசரவாக்கம் சபையில் வெளிநாட்டு ஊழியர்களுக்கு கூட இடம் கிடையாது. அனைத்து வேளையும் பாஸ்டரே சபைக்கு ஆகாரம் தயாரித்து பரிமாறுவார். சபையை விட்டு வெளியே செல்ல மாட்டார். வளசரவாக்கம் பாஸ்டருடைய இந்த குணம் எனக்கு நன்கு பிடிக்கும். ஆனால் பெரவலூர் சபை பாஸ்டர் எப்பொழுதுமே ஆல்ரவுண்டில் தான் இருப்பார். ஞாயிறு ஆராதனைக்கூட அடுத்தவரிடம் விட்டுவிட்டு சென்று விடுவார். இவர் சபைக்குத்தான் அதிகமாக வெளிநாட்டு ஊழியர்கள் வருவார்கள். ஒரு சபை சிறிய சபையாக இருந்தாலும், பெரிய சபையாக இருந்தாலும் பாஸ்டர் தனது சபை அனைத்து கூட்டங்களிலும் பங்கு கொள்ள வேண்டும். இது தவிர பாஸ்டருக்கு அத்தியாவசியமான வேலை வேறு எங்கும் கிடையாது. பிறருடைய சபையில் அல்லது பொது கூட்டங்களில் இவர் பங்கெடுக்க வேண்டிய தேவையும் இல்லை. கர்த்தர் அதற்கென்று அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்களை வைத்திருக்கிறார். இவரும் தன் பண பலத்தை ஆதாயப்படுத்திக்கொண்டு தனக்கு ஐந்து வகை ஊழியங்கள் உண்டு என ஊர் ஊராக சுற்றி திரிகிறார். இவரது ஊழியம் தவறு என்பதை நீங்கள் Church Order Supplementary. Oct.1958 பத்தி.48ல் தியானிக்கலாம். எங்கு ஊழியம் தவறோ, அங்குதான் ஜனக்கூட்டம் அதிகம் காணப்படும்.

38. முடிவாக என்னுடைய வழிநடத்துதலின்படி வளசரவாக்கம் பாஸ்டர், இந்த பெரவலூர் பாஸ்டர் மற்றும் இவரை போன்று உலகம் சுற்றும் வாலிபர்களாக காணப்படும் பாஸ்டர்கள் யாவரும் தேவனால் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய பாஸ்டராக ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. இப்படிப்பட்ட சபைகளில் நீங்கள் ஐக்கியம் கொண்டால் நீங்கள் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை ஒருக்காலும் அடைய முடியாது. ஆனாலும் இங்குதான் கூட்டம் அதிகம். ஏன்? மனவளர்ச்சி அடையாத தேவனுடைய வார்த்தையை தங்கள் முதுகுக்கு பின்னால் தூக்கி எறியும் மக்கள் கூட்டம் தான் இங்கு அதிகம். ஏதோ பாரம்பரியமாக சபைக்கு சென்றுவரும் ஸ்தாபன சபையாரை பின்பற்றும் மக்களின் கூட்டம்தான் சகோ. பிரன்ஹாமை பின்பற்றுவோர்களிலும் அதிகம்.

39. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அதாவது உண்மையான தேவனுடைய சபை எங்கே இருக்கிறது? இது தேவனுடைய ராஜ்யத்திற்கென்று, இவ்வுலகத்திலிருந்து அழைக்கப்பட்ட, பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களை கொண்டது. இவர்களுக்கு இவ்வுலகம் பாத்திரமானது அல்ல. ஆதலால் இவர்கள் சிதறுண்டு காணப்படுகிறார்கள். (எபி.11:38) இவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷருடைய சித்தத்தினாலாவது பிறவாமல்

தேவனாலே பிறந்தவர்கள். (யோ.1:13) இந்த தேவனுடைய ராஜ்யம் எங்கே இருக்கிறது? இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது. (லூக்.17:21) ஆம், தேவனுடைய ராஜ்யம், தேவனுடைய பரிசுத்தவான்களின் இருதயத்திலேயே இருக்கிறது. அதுதான் காணக்கூடாத தேவனுடைய சரீரம். இதுதான் பரிசுத்த ஆவி. இதுதான் தேவன் வாசம் செய்யும் ஆலயம். (1கொரி.3:17)

40. தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத்.1:3) கவனியுங்கள். தேவத்துவத்தில் ஒருவரா, இருவரா, மூவரா அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை கொண்டவர்களா என்கிற சத்தியத்தை அறிகிற அறிவு அனைவருக்கும் உண்டாகாது. இந்த அறிவு திரித்துவ ஸ்தாபன சபைகளை சேர்ந்தவர்களுக்கு அல்ல, தேவத்துவத்தில் மூவர், இருவர், ஒருவர் என்று விசுவாசிப்பவர்களுக்கு அல்ல. அந்நிய பாஷை என கூறி அக்கர, புக்கர, திக்கர என கூச்சலிடுபவர்களுக்கு அல்ல. தீர்க்கதரிசனம் உரைப்பவர்களுக்கு அல்ல. அற்புத அடையாளங்களை செய்பவர்களுக்கு அல்ல. வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கிறவர்களுக்கு அல்ல, குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணுகிறவர்களுக்கு அல்ல, மரித்தோரை எழுப்புகிறவர்களுக்கு அல்ல, பிசாசுகளை துரத்துகிறவர்களுக்கு அல்ல, செவிடர்களை கேட்கபண்ணுகிறவர்களுக்கு அல்ல, குருடர்களுக்கு பார்வை கொடுக்கிறவர்களுக்கு அல்ல மாறாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே உண்டாகும். பாருங்கள் தேவனால் தெரிந்துகொள்ளபடாதவர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே அற்புதங்களையும் அடையாளங்களைடயும் செய்தார்கள். தியானியுங்கள். (மாற்.9:38-39) வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் எனப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும் கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு. இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் உண்டு. இவர் ஒருவரே தேவனன்றி வேறொரு தேவனும் இல்லை. (1கொரி.8:4-7) இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. மாறாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களிடத்தில் மாத்திரமே உண்டு. மேலும் சிந்தியுங்கள் தேவத்துவத்தில் பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான். இங்கு சற்று தியானியுங்கள். தேவத்துவத்தில் உள்ள குமாரனை பிதா தவிர வேறொருவரும் அறியார்கள். உலகப்பிரகாரமான அந்தஸ்துள்ளவர்களினாலோ, பதவி, பட்டங்களை உடையவர்களாகவோ, அறிவாற்றலினாலோ, பாண்டித்தியம் பெற்றவர்களாலோ அறியமுடியாது. பிதா ஒருவரே குமாரன் யார் என்று அறிவார். அடுத்து குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை (பிதா) வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ, அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான். கவனியுங்கள் இப்பொழுது குமாரன் எவனுக்கு பிதாவை குறித்து வெளிப்படுத்துகிறாரோ அவனேயன்றி வேறொருவனும் பிதாவை அறிந்துக்கொள்ள முடியாது. ஆக ஒருவன் தன்னுடைய கல்வி அறிவினாலோ பட்டங்களினாலோ பதவிகளினாலோ பிதா யார்? குமாரன் யார்? என்பதை அறிய முடியாது. மேலும் பரிசுத்த வேதாகமத்தை தலைகீழாக நின்றோ, முழங்காலில் நின்றோ பலமுறை படித்து முடித்துள்ளேன் என சாட்சி கூறுபவர்களினாலும் அறிய முடியவே முடியாது. நான் ஒரு பரம்பரை கிறிஸ்தவன் என்பவர்களினாலும் அறிந்துக்கொள்ளமுடியாது. அவர்களால் தேவபக்திக்குரிய இரகசியங்களை புரிந்துக்கொள்ள முடியாது. ஆதலால் தான் இன்று தேவத்துவத்தைக்குறித்து நமது மத்தியில் பல குழப்பங்கள். பொதுவாக குழப்பங்களுக்கு காரணகர்த்தா பிசாசு. தேவத்துவம் திரித்துவத்தில் இல்லை. ஆதலால் திரித்துவ ஸ்தாபன சபை மக்கள் அவர்களுடைய அதனாசியஸ் உபதேசத்தைக் கொண்டு தேவத்துவத்தை அறிந்து, புரிந்துக்கொள்ளகூடாதபடிக்கு அவர்களது கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. ஒருவனுக்கு ஆவிக்குரிய கண்களை திறப்பது, மாம்ச கண்களை கொடுத்து சத்தியத்தை மறைப்பது தேவனுடைய சுயாதீனம். அது அவருக்கே உரியது. ஸ்தாபன சபை மக்களுக்கு தேவத்துவத்துக்கடுத்த காரியங்கள் மறைக்கப்பட்டுள்ளது. (மத்.13:13-16)

41. நம்மில் ஒவ்வொருவருக்கும் அந்த சுயாதீனம் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஆதியிலிருந்தே கொடுக்கப்பட்ட சுயாதீனம். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட ஆதாமுக்கும் இந்த தெரிந்துகொள்ளுதல் என்கிற சுயாதீனம் கொடுக்கப்பட்டது. நம்முடைய தெரிந்துகொள்ளுதல் சில வேளைகளில் சரியாகவும், சில வேளைகளில் தவறாகவும் இருக்கலாம். அதற்கு நாமே பொறுப்பு. சரியானதை தெரிந்துகொண்டால் நம்முடைய வாழ்க்கையில் அது லாபம். அது சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டுவரும். நம்முடைய தெரிந்துகொள்ளுதல் தவறாக இருக்குமானால் அதனால் நஷ்டம், பிரச்சனைகளையும், துன்பங்களையும், துயரங்களையும் கொண்டு வரும். ஆக இந்த இரண்டிற்கும் நாமே பொறுப்பு. நன்மை தீமை இரண்டும் ஆதாமுக்கு முன் வைக்கப்பட்டது. நன்மையையே பற்றிக்கொள்ள அவன் அறிவுறுத்தப்பட்டான். ஆனால் அவன் மனைவி ஏவாளின் ஆலோசனையின்படி தீமையை தெரிந்துகொண்டான். ஏவாளை சாத்தான் வஞ்சித்தான். ஆதாம் ஏவாளின் தவறில் தன்னை இணைத்துக்கொண்டான். ஏவாளின் நடத்தை தவறு என்று ஆதாமுக்கு தெரியும். ஏனென்றால் அவன் தேவகுமாரன். ஆனால் ஏவாள் அவன் சரீரத்தின் ஒரு பாகமாக இருப்பதால், அவளுக்காக தன்னை அர்பணித்தான். அவள் தவறில் பங்கு கொண்டு தன்னையும் இணைத்துக்கொண்டான். ஆக தெரிந்துகொள்ளுதல் என்பது நமது வாழ்க்கையில் தேவன் நமக்கு கொடுத்த ஒரு சுயாதீனம்.

42. வானத்திலும் பூமியிலும் அநேக தேவர்களும் கர்த்தாக்களும் இருப்பதால் இதில் யாரை தெரிந்துகொண்டு நாம் ஆராதிக்க வேண்டும், யார் நம்முடைய ஆராதனைக்குரியவர் என்பதை தெரிந்துகொள்வது நமது சுயாதீனத்திற்கடுத்த காரியம். ஆனால் இதில் நாம் நம்முடைய சமுதாய பாரம்பரியத்தின்படி தெரிந்தெடுக்கிறோம் இது தவறு. எனது முற்பிதாக்கள் இன்னாரை தங்களது ஆராதனைக்குரியவராக தெரிந்துகொண்டார்கள். ஆதலால் நாங்களும் அந்த வழியிலே செல்கிறோம் என்பது தவறு. நன்கு படித்த நல்ல உத்யோகத்தில் உள்ள ஒரு நபரை நான் நன்கு அறிவேன். ஒருமுறை அவரது சமுதாயத்தில் மதிப்பிற்குரிய மதத்தலைவராக இருக்கும் அந்த பெரிய மனிதருடைய காலில் சென்று விழுந்து தொட்டு கும்பிட்டு மரியாதை செலுத்தினார். அது எனக்கு அருவருப்பாக இருந்தது. அந்த சம்பிரதாயம் முடிந்தவுடன் அவர் காலில் விழுந்த காரியத்தை குறித்து அவரிடத்தில் கேட்டேன். இதோ பாருங்கள், அவரும்

உங்களை போல் ஒரு மனிதன் தானே அவருடைய வாழ்க்கையில் உங்களைவிட சற்று பரிசுத்தம் இருக்கலாம், ஆனால் மாம்சத்தில் பிறந்த யாவரிடத்திலும் மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை அனைவரிடத்திலும் உண்டு. இதை மேற்கொள்வது மிகவும் சிரமம். இப்படியிருக்க நீங்கள் மனிதன் காலில் விழுவது ஏன்? அவரும் உங்களைபோல் ஒரு மனிதன் தானே என்றேன். அந்த படித்து பட்டங்கள் பெற்று பெரிய உத்தியோகத்தில் இருக்கும் அவர் ஒரு மதத்தலைவர், ஆதலால் நாம் அவர் காலில் விழ வேண்டும், அவர் பாதத்தில் விழுவது ஆண்டவருடைய பாதத்தில் விழுவதற்கு சமம் எனக்கூறி அவ்வாறாக நாங்கள் அதை கடைப்பிடித்து வருகிறோம். அந்த சடங்காச்சாரத்தின்படியே, அந்த பாரம்பரியத்தின்படியே அவர் காலில் விழுந்தோம். உண்மையிலே இது ஒரு மூடநம்பிக்கைதான் என்றார். நாம் மூடநம்பிக்கை அடிப்படையில் தான் நாம் அராதிக்கிறவரை தேர்ந்தெடுக்கிறோம்.

43. தேவன் என்றால் ஆராதனைக்குரியவர் என்று பொருள். நம்முடைய ஆராதனைக்குரியவர் யார் என்பதை தெரிந்தெடுக்கும் சுயாதீனம் நமக்கு உண்டு. நாம் மேலே தியானித்தபடி வானத்திலேயும், பூமியிலேயும் தேவர்கள் எனப்படுவர்கள் உண்டு. ஆனால் நமக்கோ பிதாவாகிய ஒரே தேவன் உண்டு. இந்த தேவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சோதனையாக விளங்கிய அந்நிய தேவர்களாகும். இப்படியே அநேக தேவர்களும் கர்த்தாக்களும் உண்டு. சகல ஜனங்களும் தங்கள் தங்கள் தேவனுடைய நாமத்தை பற்றிக்கொண்டு நடக்கிறார்கள். நமது தமிழ்நாட்டை பொறுத்த அளவில் சிவனை வழிப்பட்டு சைவர் என்றும், பிரம்மாவை வழிப்பட்டு பிராமணன் என்றும், விஷ்ணுவை வழிப்பட்டு வைணவர் என்றும், சிலர் புத்தரை வழிப்பட்டு புத்தசமயத்தார் எனவும், சிலர் மகாவீரரை வழிப்பட்டு குஜராத்தியர் எனவும், சிலர் அல்லாவை வழிப்பட்டு முகமதியர் எனவும், சிலர் குருநானக்கை வழிப்பட்டு பஞ்சாபிகள் எனவும், சிலர் கிறிஸ்துவை வழிப்பட்டு கிறிஸ்தவர்கள் எனவும் அழைக்கப்படுகிறார்கள். இவ்வாறாக பற்பல தெய்வங்களை பற்பல சாயலில் ஆராதிக்கிறார்கள். நாம் யாரை குறித்தும் எதுவும் குறை கூற இங்கு வரவில்லை. அது அவரவர்களின் தெரிந்துகொள்ளுதல், சுயாதீனம். இவர்களை போன்று கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகிறவர்கள் மத்தியில் சிலர் பிதாவாகிய தேவனை யேகோவா என்று அழைத்து, யேகோவா சாட்சிகள் என்று அழைக்கப்படுகின்றனர். சிலர் இயேசுவை (குமாரனை) மட்டும் ஆராதித்து இயேசு நாமக்காரர் என்று பட்டம் சூட்டிக்கொண்டனர். சிலர் பரிசுத்த ஆவிக்கு மட்டும் தனி அந்தஸ்து கொடுத்து ஆராதித்து வருகிறார்கள் எனவும் நான் கேள்விப்பட்டேன். இன்னும் சிலர் திரித்துவம் என்ற பேரில் பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்தஆவி ஒருவர் என்ற பெயரில் ஆராதனை செய்கிறவர்களும் உண்டு. சிலர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே ஒன்றான மெய்த்தேவன் என்று விசுவாசித்து ஆராதிப்பவர்களும் உண்டு. ஆக கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்கிறவர்கள் மத்தியில் பற்பல வழிப்பாடுகள். சில வேளைகளில் ஒரு வழிப்பாடுமுறை கொண்டவர்கள் மனமாற்றம் அடைந்து, மற்றவருடைய வழிப்பாட்டு முறையை கடைபிடிக்கிறார்கள். ஆதலால் இவர்கள் மத்தியில் விரோத மனப்பான்மை எழும்புகிறது. ஆனால் மனமாற்றம் ஒருவனுக்கு தெரிந்துகொள்ளுதலை கொண்டுவருகிறது. அதில் அவருக்கு சுயாதீனம் உண்டு. ஒருவனுடைய சுயாதீனத்தில் மற்றவர் தலையிட்டு அவருடைய விசுவாசத்தை சீர்குலைப்பது தவறு.

44. பரிசுத்தவேதாகமத்தில் நாம் அநேக தேவர்கள், தேவதைகளைக்குறித்து காண்கிறோம். மனுஷர் கைவேலைகளினால் செய்யப்பட்ட தேவர்கள். (உபா.4:26) இரட்சிக்க திராணியற்ற தேவர்கள். (உபா.32:37) பற்பல ஜாதிகளின் தேவர்கள் (நியாயாதி.6:10, 9:27) எகிப்தின் தேவர்கள் (யாக்.12:12) மலைத்தேவர்கள் (உபா.12:2,3) சீதோனியரின் தேவதை அஸ்த்ரோத் (1ராஜா.11:5) இந்த அஸ்த்ரோத்தை பாபிலோனியர் இஸ்தார் (Iswhar) என அழைக்கின்றனர். இவள் வானங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் தலைவி என கூறி வானராக்கினி எனவும் அழைக்கப்பட்டாள். இவள் ரோமர் மத்தியில் வீனஸ் எனவும் அழைக்கப்பட்டாள். (நியாயாதி.10:6) பெண்கள் இந்த வானராக்கினியால் பெரிதும் கவரப்பட்டார்கள். (எரே.7:16-20, 44:15,30 ) எபேசியருடைய மகாதேவியாகிய தியானாள் (அப்.19:27,28) அம்மோனியரின் தேவதை மிஸ்கோம் (1ராஜா.11:5) மோவாபியருடைய கெமோஷ் (எண்.21:29) கானானியரின் தெய்வம் மேளாகு. சீரியா, பாலஸ்தினா நாட்டியரின் தெய்வம் தம்மூஸ். இதற்கு அதோனிஷ் என்ற பெயரும் உண்டு. அதோனிஷ் பெயரில் பேனிக்கியா நாட்டுமக்கள் வணங்கினார்கள். (எசே.8:14) தாகோன் பெலிஸ்தரின் தெய்வம். (நியாயா.6:23) பாகால் பெரீத் (ஏல் பெரீத்) சீகேமியின் தெய்வம். (நியாயா.8:33,9:46) எக்ரோனின் தெய்வம் பாகால் (2ராஜா.1:3) இது புதிய ஏற்பாட்டில் பெயல்செபூல் என்று அழைக்கப்படுகிறது. (மத்.10:25) இப்படியாக ஆதிகாலத்தில் அநேக தேவர்கள் தேவதைகள் இருந்தார்கள். ஜனங்கள் அவர்களை ஆராதித்து வந்தார்கள். இன்றும் இது போன்று அநேக தேவர்களை / தேவதைகளை ஆராதித்து வருகிறார்கள்.

45. ஆனால் நமக்கோ பிதாவாகிய ஒரே தேவன் உண்டு. இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் உண்டு. (1கொரி.8:6) There is but one God, One Lord, Jesus Christ. ஒருவரேயன்றி வெறொரு தேவன் இல்லை. (1கொரி.8:4) There is no other God but one. இங்கு ஒரே தேவன் ஒரே கர்த்தர் என்றவுடன் தேவர் ஒருவர், கர்த்தர் ஒருவர் என்று தேவத்துவத்தில் இருவர் கொள்கைக்கு திரும்பிவிடக்கூடாது. ஏனென்றால் கர்த்தரே தேவன் (சங்.100:3) Know ye that the LORD, He is God. அன்று இஸ்ரவேல் புத்திரர் நாங்கள் கர்த்தரையே சேவிப்போம். அவரே நம்முடைய தேவன் என்றார்கள். (யோசு.24:18) தேவனாகிய கர்த்தர் : நானே அவர்கள் தேவனாகிய கர்த்தர் (யாத்.29:46) **கர்த்தருடைய தூதனானவர்** ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று மோசேக்கு தரிசனமானார். மோசே முட்செடி வெந்து போகிறதை பார்க்கும்படி கிட்டே வருகிறதை **கர்த்தர்** கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து **தேவன்**, மோசேயை நோக்கி (யாத்.3:4) ஆக கர்த்தருடைய தூதனானவர், கர்த்தர், தேவன். ஒருவரேயன்றி மூவர் அல்ல. இந்த தேவனாகிய கர்த்தர் தான் காலம் நிறைவேறினபோது மாம்சத்தில் வெளிப்பட்டு குமாரன் ஸ்தானத்தை கொண்டவராய் நம்முடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம்

பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார். குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.(1யோ.5:20) இவர் மூவரில் ஒருவர் அல்ல, தேவத்துவத்தில் இரண்டாவது நபரும் அல்ல. மாறாக தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. பிசாசு தேவத்துவத்தை மூவருக்குள், உலக தேவர்கள் அனைவருக்குள்ளும் கொண்டுவந்து விட்டான் என்பதை இதன் வாயலாக நன்கு அறிவீர்கள். சாலொமோன் கர்த்தரே தேவன் என்றும், (1ராஜா.8:59) எலியா கர்த்தரே நீர் தேவனாகிய கர்த்தர் என்றும் (1ராஜா.18:37) அறிக்கை செய்தார்கள். அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவே கர்த்தர் என்று பிரசங்கித்தார்கள். ஆக நாம் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் பிதாவாகிய தேவனாக நம் எல்லார் மேலும், குமாரனாக எல்லாரோடும், பரிசுத்தஆவியாக நம் எல்லாருக்குள்ளும் இருக்கிறார். (எபே.4:6) குமாரனாக அந்த பிதாவாகிய தேவன் நம் எல்லாரோடும் இருந்ததை சங்கீதக்காரன் தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம் பண்ணும் பொருட்டு என கூறுகிறான். (சங்.68:18) ஆக நமக்கு ஒரே தேவன் உண்டு. அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இவரே நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை நம்முடைய பாவத்திலிருந்து, அக்கிரமத்திலிருந்து, மீறுதல்களிலிருந்து மீட்டுக்கொண்டார். ஆக இந்த கர்த்தரையே தெய்வமாக கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது. ஆனால் விசுவாசிகளில் அநேகர் நூதன தேவர்களை தெரிந்துகொண்டார்கள். (நியாயாதி.5:8) சிலர் லார்ட் நாராயணாவின் 10 வது அவதாரம் எனக்கூறி ஸ்ரீராசைய்யா பாலாசீர்லாறி முத்துகிருஷ்ணாவை ஆராதிக்கிறார்கள். சிலர் ஏழாம் சபைக்கால தூதனை கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்து என தங்கள் வாயினால் அறிக்கையிட்டு ஆராதிக்கிறார்கள். சிலர் பிதாவே உம்மை ஆராதிக்கிறோம், குமாரனே உம்மை ஆராதிக்கிறோம், பரிசுத்த ஆவியே உம்மை ஆராதிக்கிறோம் என மூன்று பேரை கூப்பிட்டு ஆராதிக்கிறார்கள். இவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும், இவர்கள் ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு, இவர்களது இருதயம் கொழுத்திருக்கிறது என பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு சொல்லியிருக்கிறார்.

46. முடிவாக தேவனை தெரிந்துக்கொள்ளும் விஷயத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட சுயாதீனத்தில் நானும் என் வீட்டார் அனைவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே சேவிக்கிறோம். வேறே தேவர்களை சேவிக்கும்படி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விட்டு விலகுகிற காரியம் எங்களுக்கு தூரமாய் இருப்பதாக. கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவை சேவிப்பது எங்களுக்கு அருவருப்பாக இருப்பதாக. பிதாவாகிய ஒரு தேவனையும், குமாரனாக ஒரு தேவனையும், பரிசுத்த ஆவியாக மூன்றாவது ஒரு தேவனையும் சேவிப்பது எங்களுக்கு மதிகேடான செயலாக இருப்பதாக. எங்களது இருதயத்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நேராக திருப்பி, அவரையே சேவித்து அவர் சத்தத்திற்கு / பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்ட உபதேசங்களுக்கு மாத்திரமே கீழ்படிவோம். திரித்துவ ஸ்தாபன சபை சத்தத்திற்கு அல்ல. ஏனென்றால் அது பிசாசினால் வழிநடத்தப்படும் சபை.

47. நாம் நம்முடைய வாழ்க்கையின் பாதையில் நம்முடைய நண்பர்களை தெரிந்துகொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். தாவீது தன் வாழ்க்கையில் தனக்கு விரோதியாக இருந்த சவுலுடைய மகன் யோனத்தானை தெரிந்துகொண்டான். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் நேசித்தார்கள். யோனத்தானின் மரணத்தை அறிந்த தாவீது : என் சகோதரனாகிய யோனத்தானே உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்: நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய், உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது. ஸ்திரீகளின் சிநேகத்தை பார்க்கிலும் அதிகமாயிருந்தது என்கிறான். (2சாமு.1:26) ஆனால் என்னோடு மிக ஐக்கியமாயிருந்து, அவர்கள் குடும்பத்தார் அனைவரோடும் நான் பழகி அவர்களுடன் உணவு உண்டு, அநேகமாக நேரங்களில் சத்தியத்தை குறித்து தியாணித்து பகிர்ந்து கொண்ட காலங்கள் உண்டு. ஆனால் ஒவ்வொருவரும் இவர் எங்களை குறித்து எங்கள் குடும்பத்தினரை குறித்து எங்கள் ஊழியத்தை குறித்து மறைமுகமாக தாக்கி எழுதியுள்ளார் என்ற சிந்தனையில் ஒவ்வொருவராக அனைவரும் என்னை விட்டு பிரிந்தனர். ஒருவர் என் சபை உன்னால் உடைந்து விட்டது ஆதலால் வராதே என்றார். இரண்டாவது நபர் நீ வெளிப்படுத்தின விசேஷத்தில் சகோ.பிரன்ஹாம் காலில் யோவான் விழுந்தான் என்பதை விசுவாசிப்பது இல்லை. ஆதலால் உன்னோடு ஐக்கியம் இல்லை என்றார். மூன்றாவது நபர் நீங்கள் என் குடும்பத்தில் நடந்த திருமணத்தை மறைமுகமாக விமர்சித்து எழுதி விட்டீர்கள் ஆதலால் எங்கள் வீட்டு கதவு உங்களுக்கு அடைபட்டு விட்டது என்றார்கள். நான்காவது நபர் நீங்கள் இதுவரை எங்கள் வீட்டிற்கு எங்கள் அழைப்புக்கு இணங்கி எத்தனையோ முறை வந்து சென்றீர்கள். ஆனால் இந்த முறை நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தபோது எங்கள் மகன் இறந்துவிட்டான். அதற்கு நீங்கள் தான் காரணம். ஆதலால் நீங்கள் எங்கள் வீட்டிற்கு வரக்கூடாது என்றார். ஐந்தாவது நபர் நான் உங்களை சென்னைக்கு வரக்கூடாது என்று சொன்னேன். அப்படியிருந்தும் நீங்கள் சென்னைக்கு வந்து குடியேறிவிட்டீர்கள், மற்றும் ஊழியம் செய்கிறீர்கள் ஆதலால் நான் இதுவரை செய்து வந்த உதவிகளை இனி செய்யப்போவது இல்லை என்றார். ஆறாவது நபர் நீங்கள் பெண்கள் வேலை செய்வது குறித்து கடிந்து எழுதுகிறீர்கள். ஆனால் என் மனைவியோ கர்த்தர் கொடுத்த வேலை செய்கிறாள். அவர்களை மறைமுகமாக கண்டிப்பதற்காகவே நீங்கள் உங்கள் செய்திகளில் பெண்கள் வேலை செய்வது தவறு என எழுதுகிறீர்கள். ஆதலால் இனி எங்கள் வீட்டிற்கு வராதீர்கள் என்றார். ஏழாவது நபர் நான் திருமண நேரத்தில் ஆண் பெண் இருவரும் விவாக மேடையில் ஒருவரை ஒருவர் தழுவி முத்தம் செய்வதை அனுமதிக்கிறேன். சகோ.பிரன்ஹாம் அவரது சபையில் இதை அனுமதிக்கிறார். நான் பிரன்ஹாம் உபதேசத்தில் இருப்பவன். ஆதலால் அதை அனுமதிக்கிறேன். நீங்களோ என்னை மறைமுகமாக குற்றப்படுத்துகிறீர்கள் எனக்கூறி என்னை தனது சபையிலிருந்து துரத்தினார். எட்டாவது நபர் எப்பொழுது என் வீட்டிற்கு வந்தாலும் எனது சபைக்கு வந்தாலும் என் மனைவி நகைகள் அணிந்திருப்பதை பார்த்து அதை சுட்டிக்காட்டி கடிந்து கொள்கிறீர்கள். பெண்கள் ஆபரணங்களை அணிவதில் தவறு ஒன்றும் இல்லை. உங்கள் உபதேசத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் எங்கள் சபையில் உங்களுக்கு இடமில்லை என்றார்கள். ஒன்பதாவது நபர் என்ன பிரதர் எப்பொழுது சபைக்கு வந்தாலும் அது சரியில்லை இது சரியில்லை என்று குறைகூறிக்கொண்டே இருக்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் உபதேசிப்பது வேதவாக்கியங்களின் அடிப்படையில்

சரியாக இருக்கலாம். ஆனால் அதை நடைமுறையில் கடைபிடிப்பது சுலபமான காரியம் அல்ல. திருமணம் ஆன பெண்கள் வேலை செய்யகூடாது என்கிறீர்கள். புருஷன் சம்பாத்தியம் போதாவிட்டால் மனைவி வேலைக்கு செல்லத்தான் வேண்டும். ஒருவர் சம்பாத்தியத்தில் இந்நாட்களில் குடும்பம் நடத்த முடியுமா? ஆதலால் இருவரும் வேலைக்கு செல்கிறோம். உங்கள் உபதேசம் காலத்திற்கேற்றவாறு இருக்கவேண்டும். அனைத்திற்கும் வேதவாக்கியங்களை எடுத்துக்காட்டாக கூறி போதனை செய்யக்கூடாது. நீங்கள் இப்படியே உபதேசம் பண்ணிக்கொண்டு போனால் எங்கள் சபை சீக்கிரத்தில் காலியாகிவிடும். ஆதலால் எங்கள் சபைக்கு இனி வர வேண்டாம் என்றார். ஆதலால் நான் என் கால்களில் படிந்திருந்த தூசியை உதற வேண்டியதாயிற்று. ஆக நாளுக்கு நாள் வராதே, வராதே என்கிற பட்டியல்தான் நீண்டுக்கொண்டே செல்கிறது. சத்தியத்தை சொல்வதால் தான் நான் சத்ரு ஆனேன். ஒவ்வொரு விசுவாசிகளும் ஊழியக்காரர்களும் நான் அவர்களுக்கு சாதகமாகவே எழுதவேண்டும், பிரசங்கிக்க வேண்டும் என நினைக்கிறார்கள். அவர்களால் தங்களுடைய விசவாசத்தை கிரியைகளில் வெளிப்படுத்த முடியவில்லை. ஆனால் கிரியையில்லாத விசுவாசம் செத்தது. (யாக்.2:20)

48. முடிவாக சபை அங்கத்தினர்களே தேவனுடைய வார்த்தையிலுள்ள தகுதிகளை உங்கள் சபை, உங்கள் பாஸ்டர், உங்கள் டீக்கன், சபையில் பிரபலமானவர்கள் பெற்றிருக்காவிட்டால் அதை விட்டு வெளியே வந்து கிறிஸ்துவுக்குள் நுழைந்துக்கொள்ளுங்கள். அவர்களை விட்டு வெளியே வா, உன்னை அவர்களிடமிருந்து வேறுபிரித்துக்கொள். இது உங்களுக்கு என்னுடைய ஒரு பயபக்தியான எச்சரிக்கை.

49. நம்முடைய ஆடைகளை தெரிந்தெடுக்கும் உரிமையும் நமக்கு உண்டு. சிலர் தங்களுடைய சரீரத்தை மறைப்பதற்கென்றே ஆடைகள் அணிவார்கள். சிலர் தங்கள் சரீரத்தை எடுத்துக்காட்ட, அதாவது ஆண்கள் பெண்களை கவர்ச்சிப்பதற்கும், பெண்கள் ஆண்களை கவர்ச்சிப்பதற்கும் ஆடைகள் அணிவது உண்டு. தமிழ்நாட்டு கலாச்சாரத்தின்படி பண்டை காலத்து பெண்கள் சேலை அணிந்து தங்கள் உடம்பை முற்றிலுமாக மறைத்து தன்னடக்கத்துடன் காணப்படுவார்கள். ஆனால் இன்றைய சமுதாயத்தில் அது பெரியவர்களாக, சிறியவர்களாக இருந்தாலும் சரி பெண்கள் தங்கள் சரீர கட்டை பிறருக்கு எடுத்துக்காட்டும் அளவில் லெக்ஹின்ஸ், உடம்போடு இறுக்கமாக இருக்கும் ஜீன்ஸ் பேண்ட் போன்ற ஆடைகளை தரித்துக்கொண்டு ரோட்டில் ஊர்வலம் வந்து எவனை விழுங்கலாம் என்று வகைத் தேடிக்கொண்டு திரிகிறார்கள். ஆடைகள் அணிவதும், ஒருவன் / ஒருத்தியை தெரிந்துகொள்ளுதல் அடிப்படையிலே உள்ளது. இன்றைய சமுதாயத்தில் கிறிஸ்தவர்களை காண்பது அறிதாக இருக்கிறது. எங்கும் பெயர் கிறிஸ்தவர்களே காணப்படுகிறார்கள். சிலர் வாழ்க்கையில் எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் கொண்டுள்ளார்கள். சிலர் இப்படித்தான் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளார்கள். இந்த ஏழாம் சபைக்காலத்திலும் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியில் உள்ள பலரை நான் அறிவேன். இதில் அநேகர் எப்படியும் வாழலாம் என்ற கோட்பாடு கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். செய்திக்கு தேவனுடைய வார்த்தைக்கு மாறாக தங்கள் மனைவிகளை பொது பணித்துறைக்கு வேலைக்கு அனுப்புகிறார்கள். தங்கள் பெண் பிள்ளைகளை பொன் ஆபரணங்களினால் அலங்கரித்து மகிழ்கிறார்கள். பணத்திற்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு அவிசுவாசியை திருமணம் செய்கின்றனர். இவர்கள் வாழ்க்கையில், ஊழியத்தின் பாதையில் அனைத்து காரியங்களும் வேதவாக்கியங்களுக்கு, தாங்கள் அறிந்த சத்தியத்திற்கு இக்காலத்திற்குரிய செய்திக்கு மாறாகவே இருக்கிறது. ஒரு சிலர் மட்டும் வேதவாக்கியங்களுக்கு முற்றிலுமாக தங்களை அர்பணித்து வேதவாக்கியங்களின்படி தங்களை காத்துக்கொள்கிறார்கள். இவர்கள் திருவசனத்தை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்து கனி கொடுக்கிறவர்களாகயிருக்கிறார்கள். அவிசுவாசிகளோடு சம்பந்தம் கொள்வது இல்லை. பாலிய ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாகயிருக்கிறார்கள். காரணம் என்ன? பலர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றதோடு சரி. அவர்களை இயக்க, தெரிந்த வேதவாக்கியங்களுக்கு கீழ்படிந்து அதன்படி நடக்க, அவர்களை வழிகாட்ட, வழிநடத்த அவர்களிடம் பரிசுத்த ஆவியும், உண்மையான மேய்ப்பனும் இல்லை. ஆதலால் ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை. உலகம் அவர்களை மேற்கொண்டுள்ளது. அவர்கள் உலகத்திற்குரியவர்களாகயிருக்கிறார்கள்.

50. எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு கொள்பவர்கள் யார்? நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்து அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களாக இருக்கலாம். அது உங்களை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு தகுதி படுத்தாது. இது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு (Elected People) மாத்திரமே. திரித்துவ ஸ்தாபன சபை போதகர்கள், தலைவர்கள், விசுவாசிகள் யாவரும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் கைவிடப்பட்டவர்களே. ஆனாலும் நாம் முன்பு பார்த்தபடி பரிசுத்தவான்களில் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு பெறாதவர்கள் உபத்திரவ காலத்திற்குள் பிரவேசித்து இரண்டாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பார்கள், ஆனால் மணவாட்டியாக முடியாது. மணவாட்டி ஸ்தானம் முற்றிலுமாக வேறுப்பட்டது. நாம் பழைய ஏற்பாடு காலத்தில் எடுத்துக்கொள்ளப்படுதலை மூன்று முறையும், புதிய ஏற்பாடு காலத்தில் மூன்று முறையும் நடப்பதை காணலாம்.

(அ) முதலாவது ஏனோக். இவன் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமல் போனான். தேவன் இவனை எடுத்துக்கொண்டார். (ஆதி.5:24) பாருங்கள் விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தை காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணாமல் போனான். அவன் தேவனுக்கு பிரியமானவன் என்று எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்னமே சாட்சி பெற்றான். (எபி.11:5)

(ஆ) இரண்டாவதாக எலியா. எலியாவும் எலிசாவும் பேசிக்கொண்டு நடந்து போகையில், இதோ அக்கினி ரதமும், அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது : எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறி போனான். (2ராஜா.2:11)

(இ) மூன்று மற்றும் நான்காவதாக பழைய ஏற்பாடு பரிசுத்தவான்கள் மற்றும் இயேசு. இயேசு மறுபடியும் மகா சத்தமாய் கூப்பிட்டு ஆவியை விட்டார். அப்பொழுது தேவாலயத்தின் திரைசீலை மேல் தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாக கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது. நித்திரையடைந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரம் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்த பின்பு அவர்கள் கல்லறையை விட்டு புறப்பட்டு, பரிசுத்த நகரத்திலே பிரவேசித்து அநேகருக்கு காணப்பட்டார்கள். (மத்.27:50-53) இயேசு பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள பொறுப்புக்கல் (Key Stone) ஆவார். அவை இரண்டையும் இணைத்தது அவரே. அவர் முதலில் மரித்து பின்பு உயிரோடெழுந்து எடுத்துக்கொள்ளப்பட்டார். பின்பு பழைய ஏற்பாடு பரிசுத்தவான்கள் அவருடன் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இப்பொழுது பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் அவருடைய சமுகத்தை அடைந்துவிட்டார்கள்.

(ஈ) ஐந்தாவதாக (1தெச.4:12-18) இது சபை முடிவு காலத்தில் மணவாட்டிக்கு சம்பவிக்கும் காரியம். மரித்தோர் உயிரோடு எழும்புவார்கள். உயிரோடிருப்பவர் உயிர்த்தெழுந்தவர்களுடன் மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். முன்பிருந்த ஆறு சபைக்காலங்களின் பரிசுத்தவான்கள் உயிரோடெழுந்து தங்கள் கல்லறையை விட்டு வெளியே வருவார்கள். அப்பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர்களுடன் அணிவகுத்து ஆகாயத்திற்குள் செல்வோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படும்.

(உ) ஆறாவதாக வெளி.11:11-12 ல் கூறப்பட்டுள்ள இரண்டு சாட்சிகள். மோசேயும் எலியாவும் மறுபடியும் வந்து, யோசேப்பு தன் சகோதரர்களுக்கு சாட்சியாக இருந்தது போல இவர்கள் இருவரும் தங்கள் சகோதரர்களாகிய யூதர்களுக்கு சாட்சியாக இருப்பார்கள். இவர்களுடைய பிரேதங்கள் 3 ½ நாட்கள் வீதியில் கிடக்கும். அதன்பின் ஜீவஆவி இவர்களுக்குள் பிரவேசித்து, இவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆக எடுத்துக்கொள்ளப்படுதல் பழைய ஏற்பாட்டில் மூன்று முறை ஏனோக், எலியா, பழைய ஏற்பாடு பரிசுத்தவான்கள். புதிய ஏற்பாட்டில் மூன்று முறை இயேசு, மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதல், அதாவது சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அதன்பின் மூன்றாவதாக மோசே எலியா இரு சாட்சிகள். இப்பொழுது தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கப்போகும் காலங்களையும், சமயங்களையும் குறித்து : இரவிலே திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய நாள் வரும் என 1தெச.5:1,2 ல் வாசிக்கிறோம். மேலே திருஷ்டாந்தமாக கூறப்பட்ட 28 பேரும் இந்தியாவில் ஆயத்தமா? நீங்கள் அதில் ஒருவரா? இது சிந்தித்து செயல்படவேண்டிய நேரமாயிருக்கிறது.

**ஜூலை**, 2019.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

Puplication Information to the Department of Posts

**If Undelivered**
**Please Return to:**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**PRINTED BOOK**
Subject to **Clause No. 128 P.O. GuideRules.**
Neither any Postal Licence nor Registration Required to mail it. **It is on Ordinery Post.**
**Current Postal Rate. Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**This Printed Book, Yesuvae Vaarum Edited, Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006.**